விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 04 சனிக்கிழமை (18.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 181

வாழ்நாள் முழுவதும்
வளமுடன் வாழ
அண்ணா
ஜீவாகாரம்
உடனடியாக உண்ணககூடிய
நிலையில் உள்ள சத்துணவு
விபரங்களுக்கு
அண்ணா கோப்பிக் கடை
இல.4 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

# பொதுக்கட்டமைப்பை அமைக்காவிடின் யுத்தத்திற்குச் செல்ல வேண்டி ஏற்படும்

## நோர்வே பிரதியமைச்சர் ஹெல்கிசன் 22 ஆம் திகதி கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இச் சந்திப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி கிளிநொச்சி சமாதான் செயலகத்தில் இடம் பெறவுள்ளது. இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு நாளை மறுதினம் திங்கட்கிழமை கொழும்பு வரும் பிரதிவெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் மற்றும் முக்கிய அரசியல் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்து சுனாமியால் ஏற்பட்ட அழிவுகளை பார்வையிடவுள்ளார். (ச-4)

## பௌத்த பிக்குகள் மத்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

பொதுகட்டமைப்பானது மனிதாபிமானப் பணிகளுக்காகவே உருவாக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பினை உருவாக்கவில்லையாயின் அதற்குத் தீர்வாக நாம் யுத்தத்திற்கு செல்லவேண்டிய நிலை ஏற்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஆயிரம் பிக்குகளுக்கு தெளிவுபடுத்தும் மாநாடு நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



## கேணல் பானு குழுவினர் நேற்று மட்டக்களப்பு பயணம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தலைமையிலான குழுவினர் நேற்று மட்டக்களப்பு சென்றடைந்தனர். முற்பகல் .8.30 மணியளவில் கிளிநொச்சி சந்திரன் மைதானத்திலிருந்து இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் அவர்கள் மட்டக்களப்புக்கு புறப்பட்டனர்.

கேணல் பானுவுடன் மட்டக்களப்பு அம்பாறை தளபதி ராம், அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ஜனார்த்தனன், மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், ஜெயந்தன் படையணித் தளபதி சாந்தன், மட்டு. அம்பாறை மாவட்ட புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் கீர்த்தி ஆகியோர் பானுவுடன் மட்டக்களப்பு புறப்பட்டுச் சென்றனர். அவர்களை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், கேணல் தீபன், கேணல் ஜெயம் உட்பட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் வழியனுப்பி வைத்தனர். (ச-4)

## சாரதியைத் தாக்கிவிட்டு ஆட்டோவை கடத்திய கும்பல்

### வடமராட்சி மண்டானில் சம்பவம்

மானிப்பாயில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஆட்டோ மண்டான் பகுதியில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளது. ஆட்டோச் சாரதி பலமாகத் தாக்கப்பட்டுள்ளார். சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

மானிப்பாயில் இருந்து யாழ். நகருக்கென நேற்று இருவர் அவ் ஆட்டோவை வாடகைக்கு அமர்த்தியுள்ளனர். பின்னர் கொடிகாமத்திற்கு செல்லுமாறு பணித்துள்ளனர். வரணி இராணுவ முகாமுக்கு முன்னால் ஆட்டோவை நிறுத்தி மேலும் மூவர் அதனுள் ஏறியுள்ளனர். பின்னர் மண்டான் பகுதிக்கு அழைத்துச் சென்று சாரதியை கடுமையாகத் தாக்கிவிட்டு ஆட்டோவையும் அவரின் கைத்தொலைபேசி, அடையாள அட்டை என்பவற்றையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டு மயக்க முற்றுக் கிடந்த சாரதியை நெல்லியடிப் பொலிஸார் மீட்டு மந்திகை மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த தோமஸ் விக்கிரம (வயது 53) என்பவரே தாக்கப்பட்டவர் ஆவார். இதேவேளை துப்பாக்கி போன்ற ஆயுதங்களாலேயே சாரதி தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-35)

## எதிர்க்கட்சி ஆசனங்களில் ஜே.வி.பிக்கு இடமில்லையாம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் எதிரணியில் போதிய ஆசனங்கள் இன்மையால் ஜே.வி.பியின் 34 உறுப்பினர்களுக்கு ஆளும் கட்சிப் பகுதியில் இருக்கும் ஆசனங்களிலேயே அமரவேண்டி ஏற்படும் என பாராளுமன்ற பொதுச் செயலாளர் பிரியானி விஜயசேகர தெரிவித்துள்ளார்.

தாங்கள் ஆளும் கூட்டமைப்பு அரசாங்கத்தை விட்டு வெளியேறி பாராளுமன்றத்தில் சுயாதீன குழுவாக செயற்படவுள்ளதாகவும் அதனால் தங்கள் உறுப்பினர்களுக்கு எதிர்த்தரப்பில் ஆசனங்களை வழங்குமாறும் பாராளுமன்ற பொதுச் செயலாளருக்கு கடிதம் அனுப்பியிருப்பதாக நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்திருந்தார்.

எதிரணிப் பகுதியில் ஜே.வி.பியின் அனைத்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வுத்துறை அதிகாரி நேற்றிரவு சுட்டுக்கொலை

இராணுவ புலனாய்வுத் துறையின் அதிகாரி ஒருவர் நேற்றிரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

திருமலை தேருநுவர பகுதியில் சென்று கொண்டிருந்தபோதே அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுட்டுக்கொல்லப்பட்டவர் முத்துபண்டா என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# தமிழ் மக்களின் ஏகோபித்த இராணுவமாக புலிகளை ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டமிது

## தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச்செயலாளர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை ஆயுதக்குழுவாக மாத்திரம் பார்ப்பதை நிறுத்தி விடுதலைப்புலிகளை தமிழ்மக்களின் ஏகோபித்த இராணுவமாக ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ளவேண்டிய காலகட்டம் தற்போது வந்துள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.ஏ.கந்தசாமி சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்திய இனவாதத்தை இடதுசாரிகள் என்ற போர்வையில் ஜே.வி.பி.மீண்டும் முன்னெடுத்துச் செல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் இதனை அடிப்படையாகக் கொண்டு அக்கட்சி தமது குறுகிய அரசியல் நலனை தக்கவைத்துக்கொள்ள முயற்சி செய்து வருகிறது.

தமிழர் செறிந்து வாழும் பகுதிகளிலும் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் புத்தர் சிலைகளை வைப்பதன் மூலம் பௌத்த மதத்தினை வளர்க்க முடியாது என்பது ஜே.வி.பிக்கு தெரியாத ஒன்றல்ல. எனினும் அதனை மையப்படுத்தி தமது அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள அக்கட்சி முயற்சிக்கின்றது.

தற்போதைய நிலையில் ஜே.வி.பி.யின் செயல்களைக் கண்டு பெரும்பான்மை சிங்கள மக்களே வெறுப்படைந்திருக்கின்றார்கள். அன்றி ஆயுதமற்ற நிலை தமிழ் மக்கள் இருந்த போது அவர்களை சிங்கள அரசியல் வாதிகளால் ஏமாற்ற முடிந்தது என்றும் குறிப்பிட்டார். (ர-4)

# இரு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்றுமுன்தினம் இரு கோரிக்கைகளை முன்வைத்து அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களினதும் சம்பள முரண்பாடுகள் 01.01.2004 ஆம் திகதி முதல் சீராக்கம் செய்யப்பட்டு அத் திகதியிலிருந்து புதிய சம்பள அளவுத்திட்டம் உடனடியாக அமுல்படுத்தப்படல் வேண்டும் மற்றும் புதிதாக பல்கலைக்கழக சேவையில் 04.03.1997 ஆம் திகதிக்குப் பின்னர் இணைநது கொண்ட சகல ஊழியர்களுக்கும் மாதாந்த இழப்பீட்டுப் படியை அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க உடனடியாக அமுல் செய்யவேண்டும் ஆகிய இரு கோரிக்கைகளை முன்வைத்தே அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சகல பல்கலைக் கழகங்களிலும் மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த அடையாள வேலை நிறுத்தத்தின் பின்பும் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையில் சங்கம் ஈடுபடுமென யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தலைவர் தங்கராஜா தெரிவித்தார். (ர-19)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய அனுசரணையுடன் தெல்லிப்பழைப் பிரதேச இளவாலைக் குடும்ப முனபள்ளிகளின் விளையாட்டு விழா இன்று இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (அ)


**சிறுவிளம்பரம்**

**மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

ஹோட்டல் பிள்ளையார் இன்
அறை இல.09,
31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.
T.P - 0779122836
நேரம் காலை 9.00 - இரவு 8.30 வரை
(9567)

**புதிய புத்தகம்**

விற்பனையில் சாதனை செய்த 'இது இந்துமதம்' நூலின் ஆசிரியர் 'சாமிஜி' எழுதிய புதிய புத்தகம் 'கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்' விலை ரூபா 80/=
பரணன், 138, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி 222 2365 (9599)


## இராசி பலன்

**18.06.2005**
**(ஆனி 04, சனிக்கிழமை)**
ஏகாதசி பிற்பகல் 4.22 மணிவரை
சுவாதி பின்னிரவு 12.55 மணிவரை
இராகுகாலம் 8.53 -10.23 மணிவரை
சுபநேரம் 2.53 - 4.23 மணிவரை
ஏகாதசி விரதம், அமிர்த சித்தம்

| | |
|---|---|
| மேடம் | மனோ தைரியம், நண்பர்கள் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம். |
| இடபம் | ஆரோக்கியம், தடைப்பட்ட காரியம் கைகூடும், நல்ல தகவல், தன வருவாய். |
| மிதுனம் | வியாபார நன்மை, பணக்குறைவு, காரிய இடையூறு, குடும்பக் கவலை. |
| கடகம் | தன்னம்பிக்கைக் குறைவு, தனவிரயம், உறவினர் சந்திப்பு, புதிய விடயம். |
| சிங்கம் | நற்கீர்த்தி, மனோதைரியம், சகோதரர் வழி நன்மை, காரியசித்தி. |
| கன்னி | மனோ சங்கடம், முயற்சி தாமதம், பண விரயம், போசன சுகம். |
| துலாம் | வெகுமானம், சயன சுகம், புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| விருச்சிகம் | காரிய அலைச்சல், சுபசெலவு, சோம்பல் நிலை, வீண் மனஸ்தாபம். |
| தனுசு | ஆனந்தம், நண்பர்கள் சந்திப்பு, தடைப்பட்டகாரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மகரம் | பிரபுத்தனம், பெரியோரால் மதிக்கப்படுதல், முயற்சி கைகூடும், தொழில் நன்மை. |
| கும்பம் | சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, குடும்பக் கவலை, கட்டுப்பாடு. |
| மீனம் | கொடுக்கல் வாங்கல், பிணக்கு, காரிய தாமதம், போசன நன்மை, வாகன பயம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வளவன்

### வடமராட்சியில் நிரந்தர வீடுகள்

# பயனாளிகள்—அரசுசாரா அமைப்புகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதிகளில் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை பயனாளிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

இக் கலந்துரையாடலில், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, பருத்தித்துறை பிரதேச செயலர், பருத்தித்துறை சுனாமி செயலணியைச் சேர்ந்தவர்கள், பிரதேசசபைச் செயலாளர்களை சந்தித்து நிரந்தரவீடுகளை அமைத்துக் கொடுத்தல் சம்பந்தமாகக் கலந்துரையாடினார்கள்.

நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதில் பயனாளிகளின் சம்மதத்தைப் பெறுதல்,

நிரந்தர வீடுகளை அமைக்கும் போது சுகாதாரப் பிரச்சினை ஏற்படாத வகையில் கிணறுகள் , மலசல கூடங்களை அமைத்தல், வீடுகளை அமைக்கும் முறைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக நேரடியாகப் பயனாளிகளுடன் கலந்துரையாடப்பட்டது. (அ-19)

# நுரையீரல் கோளாற்றுக்கு 'வயகரா' பயன்படுத்தலாம்

ஆண்மைக் குறைவைப் போக்கி 'செக்ஸ்' உணர்வை அதிகப்படுத்தும் வயகரா மாத்திரை இப்போது உலகம் முழுவதும் கொடிகட்டிப் பறக்கிறது. 'சைசன்' நிறுவனத்தின் இந்த மாத்திரைகளை கறுப்புச் சந்தையில் அதிக விலை கொடுத்து டாக்டர்களின் சீட்டு இல்லாமல் கூட வாங்கி சிலர் பயன்படுத்துகிறார்கள்.

'வயகரா' மாத்திரையை ஆண்மைக் குறைவுக்கு மட்டுமன்றி குழந்தைகளின் நுரையீரல் கோளாறு, சுவாசக்கோளாறு ஆகியவற்றுக்கும் பயன்படுத்தலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

'சில்ட னாபில்' என்ற இந்த மாத்திரையை மூச்சுத் திணறல், இருதயக் கோளாறு உள்ள குழந்தைகளுக்கு டாக்டர் அறிவுரைப்படி தினமும் கொடுத்து வந்தால் அவர்களுக்கு இது நல்ல பலனைக் கொடுக்கும்.

இப்போது உள்ள சிகிச்சைக்கு இது மாற்றாக அமையும் என்றும் டாக்டர்கள் கூறியுள்ளனர்.

பக்க விளைவுகளும் இதனால் மிகக் குறைவாகவே இருக்கும் என்று கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் ஜான் அடாசியா தெரிவித்துள்ளார். 14 குழநதைகளுக்கு அவரது குழு வயகரா மாத்திரைகளைக் கொடுத்து ஆய்வு நடத்தினார்கள். இந்தக் குழந்தைகள் 5 முதல் 16 வயதுக்கு உட்பட்டவர்கள்.

ஒரு வருடம் இந்த மாத்திரையை முறையாகப் பயன்படுத்தியதில் சுவாசக்கோளாறு ஏற்பட்ட குழந்தைகளுக்கு நிவாரணம் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

# திருப்திகரமான சேவைக்கு விருது சுகாதார அமைச்சர் தீர்மானம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் ஊழியர்களின் சேவைகள் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ளும் திட்டம் ஒன்று தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந் தத்திட்டத்தின் கீழ தமது சேவையைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்தவர்கள் ஜனாதிபதி விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி ஏற்கனவே அளித்துள்ளார் எனவும் பணப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ2)

# ஆசிரியர் இடமாற்றம்; விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக கல்வியமைச்சு அறிமுகம் செய்துள்ள புதிய கொள்கை 2006 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப் புதிய திட்டம் வலயத்தினுள் இடமாற்றம், வலயங்கள் மற்றும் மாகாணங்களுக்கிடையில் இடமாற்றம், மாகாணப் பாடசாலையிலிருந்து தேசியப் பாடசாலைக்கு இடமாற்றம், தேசியப் பாடசாலைகளுக்கிடையில் இடமாற்றம் என ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

மாணகாணத்தினுள் இடமாற்றம் பெறவிரும்பும் ஆசிரியர்கள் 30 ஆம் திகதிக்கு முன்னர் விணணப்பிப்பது அவசியமாகும். (து-2)

# பரு.மத்திய மருந்தகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மத்திய மருந்தகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று சனிக்கிழமை மு.ப.10.40 மணிக்கு மத்திய மருந்தக அமைப்புக் குழுத்தலைவரும் பருத்தித்துறை முன்னாள் நகரசபை உபதலைவருமாகிய பி.வின்சன் டீ போல தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிவஸ்ரீ தானு வாசுதேவக்குருக்கள், பருத்தித்துறை பங்குத்தந்தை வண.பிதா ப.இருதயதாஸ் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர். பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

இம் மத்திய மருந்தகமானது தும்பளை வீதியில் தெங்கன் கிணற்றடிக் காணியில் அமைக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக, பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், பருத்திதுறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.மயிலேறும் பெருமாள், பருத்தித்துறை மத்திய மருந்தக பதிவு வைத்திய அதிகாரி மங்கையர்மணி மகேந்திரா, யாழ். கட்டடத்திணைக்கள் பிரதம பொறியியலாளர் மு.குகநேசன், யாழ். கட்டடத்திணைக்கள நிறைவேற்றும் பொறியியலாளர் பி.தங்கராசன், பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திருமதி க.திருச்செல்வநாயகம் ஆகியோரும்,

கௌரவ விருந்தினர்களாக முன்னாள் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அ.விநாயகமூர்த்தி, யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கடற்புலிகளின் வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் அன்பழகன், பருத்தித்துறை பிரபல வர்த்தகர் பொ.இராசதுரை ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ர)

## பொதுக்கட்டமைப்பின் நடவடிக்கை கண்காணிப்பு

# சிங்கள மக்களின் பிரதிநிதியாக அரசு செயற்படுவது நியாயமற்றது

## சோமவன்சவின் கருத்தை ஏற்கிறார் அஸ்கிரிய மகாநாயக்கர்

(கொழும்பு)

அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்கம் உத்தேசப் பொதுக்கட்டமைப்பின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் சிங்களத் தரப்பின் பிரதிநிதியாகச் செயற்படுவது உகந்ததல்ல.

இவ்வாறு ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ள கருத்தை ஏற்றுக்கொள்வதாக அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம புத்தரகித்த தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க அஸ்கிரிய மகாநாயக்கரைச் சந்தித்தபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அச் சந்திப்பில் தமிழ், சிங்கள, முஸ்லிம் அனைத்து இன மக்களையும் அரசாங்கம் பிரதிநிதித்துவம் செய்வதால் சிங்கள மக்களின் பிரதிநிதியாக அரசாங்கம் செயற்படுவது நியாயமற்றது என்று சோமவன்ச அமரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அததுடன், உத்தேசப் பொதுக் கட்டமைப்பை செயற்படுத்தும் குழுவில் 5 விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் 3 முஸ்லிம் பிரதிநிதிகளும் அரசாங்கத்தின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளுமே உள்ளடக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு ஒருவருட காலமே அமுலில் இருக்கும் எனக் கூறப்படுவதை நம்ப முடியாதென தெரிவித்திருக்கும் சோமவன்ச அமரசிங்க,

1996 ஆம் ஆண்டு ஜப்பானில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பொகொய்டா பிரதேசத்தைக் கட்டியெழுப்ப 6 ஆண்டுகள் சென்றன. அபிவிருத்தியடைந்த ஒரு நாட்டிலேயே அவ்வளவு காலம் எடுக்கையில் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாட்டில் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை ஒரு வருடத்தினுள் கட்டியெழுப்பப் போவதாகக் கூறுவதை நம்ப முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 5 மாதங்களினுள் அரசாங்கம் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் ஓரளவு புனர்நிர்மானப் பணிகளைச் செய்துள்ளது. பாலங்கள், பாடசாலைகள், பாதைகள் போன்றவை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

அரச நிதியைக் கையாளும் உரிமை மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதால் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 22 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடாக அந்தக் காரியத்தைச் செய்து முடிக்க முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளைப் பிரதிநிதித்துவம் செய்வதால் விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கும் விடயங்களை அவர்களினூடாகச் செய்துகொள்ள இயலும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்கம் உத்தேசப் பொதுக்கட்டமைப்பின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் சிங்களத் தரப்பின் பிரதிநிதியாகச் செயற்படுவது உகந்ததல்ல எனவும் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் சோமவன்ச அமரசிங்க இங்கு தெரிவித்துள்ளார்.

அவரின் அக்கருத்தைத் தானும் ஏற்றுக் கொள்வதாக அஸ்கிரிய மகாநாயககர் உடுகம புத்தரகித்த தேரரும் தெரிவித்துள்ளார். (ற)

### தமிழகப் புலவரின் சிறப்புச்சொற்பொழிவு

தமிழ்நாடு திருப்பனந்தாள் அதீனத்தில் இருந்து வருகை தந்துள்ள சைவ சித்தாந்தப் புலவர் கலாநிதி சோ.குமரேசமூர்த்தியின் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 5.00 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் 'சமயம் உணர்த்தும் வாழவியல் நெறி' எனும் விடயம்பற்றி திருப்பனந்தாள் ஆதீனமடம், ஸ்ரீகாசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கலலூரி தமிழ்த் துறைப் பேராசிரியர் வைசித்தாந்தப்புலவர் காலாநிதி சோ.குமரேசமூர்த்தி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இந் நிகழ்வில் நல்லை ஆதீன 2வது குருமார் சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கவுள்ளார். (ற)

### சுருவில் ஐயனார் கோவில் மகா கும்பாபிஷேகம்

சுருவில் ஸ்ரீ பூர்ணா புஷ்கலாதேவி சமேத அரிகர புத்திர ஐயனார் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 15 நாட்கள் மண்டலாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து எதிர்வரும் மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் வருடாந்த மஹோற்சவமும் ஆரம்பமாகவுள்ளன. (அ-47)

## காணாமல் போனோர் வழக்கு

# ராஜபக்ஷ மீதான விசாரணை ஜூலை 25ற்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 1996,97 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வடபகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பான சோமரத்ன ராஜபக்ஷவின் வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்ட நீதவான் நீதி மன்றத்தில் நீதிபதி சிறீநிதி நந்தசேகரம் முன்னிலையில் நடைபெற்றது.

பூதத்தம்பி இராஜேஸ்வரி என்பவர் தனது மகனைக் காணவில்லை எனவும், சோபிகா மல்லிகா என்பவர் தனது கணவனைக் காணவில்லை எனவும், கமலாதேவி என்பவர் தனது மகனைக் காணவில்லை எனவும் செய்த முறைப்பாடுகளின் பேரிலேயே இவ் வழக்கில் குறுக்கு விசாரணை மேற்கொளளப்பட்டுள்ளது.

கடநதபுதன்கிழமை இவ் வழக்குகளின் முதலாம் பிரதிவாதியான கோப்ரல்ராஜபக்ஷவும், 2 முதல்5 வரையான பிரதிநிதிகளின் சார்பில சேர்ந்தே குணசேகரவும் ஆஜரானார்கள்.

இவ் வழக்குடன் தொடர்புடைய மூன்று பேரும் காணாமல் போயுள்ளார்கள் என மனித உரிமை ஆணைக் குழுவால் இவ் வழக்குத் தாக்கல் செய்தவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மனித உரிமை ஆணைக்குழுவினரை சட்டத்தின் முன் நிறுத்த முடியாது என்பதால் மனித உரிமை ஆணைக் குழுவானது இவர்கள் காணாமல் போனதை உறுதிப்படுத்தி சான்றிதழைத் தருமாறு யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரிக்கு நீதிபதி பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை, மேற்படி வழக்குடன் தொடர்புடைய மூன்றுபேரும் காணாமல் போயுள்ளதாக அக் காலப் பகுதயில் தம்பி செய்த முறைப்பாட்டின் பிரதியை ஜே/74 (குருநகர்) கிராம சேவையாளா மற்றும் யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரை வழங்குமாறும் நீதவான் பணிபுரை விடுத்தார்.

இவ்வழக்கு விசாரணை எதிர்வரும ஜூலை மாதம் 25 ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ற-19)

## குமாரபுரம் படுகொலை வழக்கு; ஆவணங்கள் அழிந்து போயின

## திருமலை நீதிமன்றில் தகவல்

(திருகோணமலை)

குமாரபுரத்தில் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த வழக்கின் சாட்சி ஆவணங்கள், ஆயுதங் கள் அனைத்தும் தீ விபத்தில் அழிந்து போய்விட்டன என்று திருகோணமலை உயர்நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமாரபுரம் படுகொலை வழக்கின் விசாரணை கடந்த செவ்வாய்க் கிழமை நீதவான் அன்ரன் பாலசிங்கம் முன்பு வந்தது. அப்போது நீதிமன்றத்தில் அரச தரப்பில் ஆஜரான எஸ்.கலிம்டீன, கொழும்பு அரசு ஆய்வுக் கூடத்தல் ஏற்பட்ட தீ விபத்தில் இந்த வழக்கின் சாட்சிய ஆவணங்கள், பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள உள்ளிட்டவை எரிந்து சாம்பலாகிவிட்டன என்று கூறினார்.

இது குறித்து அரசு ஆய்வகத்திடமிருந்து தமக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் கலிம்டீன் தெரிவித்தார்.

இருந்தபோதும் நேரடி சாட்சிகளின் அடிப்படையில் உரிய விசாரணை அறிக்கையை உயர்நீதி மன்ற நீதிபதியிடம் தாம் அளிப்பதாக அவர் உறுதியளித்தார்.

பின்னர் இந்த வழக்கின் விசாரணையை எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதிக்கு நீதிவான் அன்ரன் பாலசிங்கம் ஒத்திவைத்தார்.

மேலும் 8 சாட்சிகளை அன்றைய நாளில் நீதிமன்றில் ஆஜர்படுத்த உாய நோட்டீஸ் அனுப்புமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு அவர் உத்தரவிட்டார். 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி 24 தமிழர்கள் திருமலை மூதூர் பிரதேசத்தில் உள்ள குமரபுரத்தில் பேரினவாத வெறியர்களால படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே. (ற)

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

# சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள 24 மணிநேரமும் தயார்

## புதிய தலைவி ஹிராந்தி விஜயமான

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்து நிர்க்கதியாகி இருக்கும் சிறுவர் சிறுமியரின் உளவியல் பாதிப்புக்களை நீக்கி இயல்பு நிலையை ஏற்படுத்துவது பிரதான சவாலாக மாறியுள்ளது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தச் சாவாலை எதிர்கொள்வதற்கு நான்கு வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட விருப்பதாக அதிகார சபையின் நிர்வாக செயுலாளர் எஸ்.என்.விமல சிறி தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் சட்டதிட்டங்களை வலுப்படுத்துவது, தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வது, பாதிக்கப்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது போன்ற விடயங்கள் முக்கிய இடத்தை வகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வேலைக்கு அமர்த்தப்படும் அல்லது துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும். சிறுவர்கள் பற்றிய முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தமது அமைப்பு 24 மணித்தியாலங்களும் தயாராக இருப்பதாகவும் அதிகார சபையின புதிய தலைவி ஹிராந்தி விஜயமான தெரிவித்துள்ளார்.

எழுதது மூலம்தொடர்புகொள்ள விரும்புவோர் இலக்கம் 330 தலவத்துக்கொட வீதி, மாதிவல, சிறி ஜெயவர்த்தன புர கோட்டை என்ற முகவரியுடனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர் 0112 - 779196 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# பூதளக் கடற்தட்டுகள் பிறழ்ச்சி! பூகோளக் கடற்தளங்கள் நீட்சி!

5 தொடர்ச்சி...

அவர் கூறியவை பின்வருமாறு:-

1. பூ தளவாதிகளின் பு,ர்வீக யு,கத்தின்படி பு,மியின் அடித் தட்டு கடினமான திடத்தட்டோ அல்லது தகர்க்க முடியாத வலுத் தட்டோ அன்று! பு,மிதளத்தின் கீழ்த்தட்டுப் பாறைகள் தனிப்பட்ட அளவுகளுடன் (40-60) மைல் தடிப்பு பல்வேறு உபப்பிரிவுகள் கொண்ட பத்து பெருந்தட்டுகளாக அவற்றின் அடியே கொந்தளிக்கும் கவசக் கனல் திரவத்தில் (Hot Viscous Mantle) மிதக்கின்றன!

2. இந்த அடித்தட்டுகள் மீது அர்ந்துள்ள உலகின் நிலப்பரப்புகள், கடற்தளங்கள் ஆகியவை எல்லாம் ஒரு காலத்தில் ஒன்றாய் பிணைக்கப்பட்டு ஒற்றைப் பெருங்கண்டமாய் இருந்தன. சுமார் 200 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு அந்த அசுரக்கண்டம் பிளக்க ஆரம்பித்தது! அதன் விளைவால் தான் நாம் வாழும் ஏழு சிறு கண்டங்களும் (வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆபிரிகா, அவுஸ்திரேலியா, ஆசியா, ஐரோப்பா, அந்தாட்டிகா) மற்ற பிற தீவுகளும் உருவாகின! அச்சிறு கண்டங்கள் பல மில்லியன் ஆண்டுகளாக மிக மெதுவாக நிலப்பெயர்ச்சியாகித் தற்போதுள்ள நிலையத்தில் இருக்கை கொண்டுள்ளன!

3. பு,தள அடித்தட்டுகள் கடல் நடுவே ஆழிப் பிளவுகளிலிருந்து (DeeP Fissures in Mid Ocean) பொங்கி எழும் திரவப் பாறைகளின் முனைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன! அதே சமயத்தில் பு,மியில் உட்கருவில் பல திசைகளில் உண்டாகும் அசுர ஆற்றலில் ஆண்டுக்கு அரை அங்குலம் முதல் ஆறு அங்குலங்கள் வரை அடித் தட்டுகள் உந்தித்தள்ளப்படுகின்றன.

4. இடநெருக்கடியில் ஒடுங்கிக் கொள்ள முறியும் அடித்தட்டுகள் உந்தும் போது, கண்களுக்குப் புலப்படும் விந்தை விளைவுகள் நிகழ்கின்றன.

a) கருங்கல் (Granite) படிந்த நிலத்தட்டுத் திணிவான, நீரில் மிதக்காத பஸால்ட் (Basalt) தாது கலந்து கடற்தட்டைச் சந்திக்கும் போது, நிலத்தட்டு கடற்தட்டு மீது பு,தத்தகர்ப்பு யந்திரம் போல (Titanic Bulldozer) அமுக்கி ஏறுகிறது! அப்போது கீழ்த்தட்டுப் பாறைகளைத் தேங்காய் திருகி போல் சீவி விழும் செதுக் குத் துணுக்குகள் நசுக்கப்பட்டுக் கடலடியில் பல மில்லியன் ஆண்டுகளாகச் சேமிப்பாகின்றன! அந்த பாறைச் சீவல்கள், நிலத்தட்டு முனைகளில் குவிந்து, குவிந்து பின்னால் தொடர்மலையாக எழுகின்றன!

### இணையப் பார்வை

B) கடற்தளத் தட்டு கடலடியே செங்குத்தாக ஊடுருவி, நிலத்தட்டின் முனையில் நீண்டதோர் கடற் குழியை (Ocean- Floor Tench) உண்டாக்குகிறது! கடற்தட்டு உராய்வு வெப்பத்தால் உருகி, பு,மியின் உட்கருவில் வெந்நிறத் தீப்பிழம்புக் குட்டையாக மாறுகிறது. உள்ளே சிக்கிக் கொண்ட இந்த தீக்குழம்பு (Lava) பு,மியில் துளைகளை உண்டாக்கிப் பிறகு எரிமலையாகக் குமுறி வெளியாகிறது!

c) நிலத்தட்டு, கடற்தட்டு ஆகிய இரண்டின் மோதல், கீழ்த் திணிப்பு, நேர் அறுப்பு, துண்டாக்கல் போன்ற (Collision. Subduction. Shearing. Separation) தட்டுப் பிறழ்ச்சிகள் பு, கம்ப அதிர்வுகளை (Seismic Disturbances) உண்டு பண்ணும் வல்லமை படைத்தவை.

(பகுதி I முற்றும்)

## இன்று ஒரு தகவல்

# இருவகை மன்னர்கள்

இந்த உலகத்தில் எத்தனையோ ராஜாக்கள் வந்திருக்கின்றனர். போயிருக்கின்றனர். சிலபேர் கெட்டிக்காரர்களாக இருந்திருக்கின்றனர். சிலபேர் விபரம் தெரியாதவர்களாகவும் இருந்திருக்கின்றனர். அரசன் எவ்வழி அவ்வழி குடிமக்கள் என்பார்கள். அதனால் அரசன் நல்லவனாக இருந்தால் மக்களும் நல்ல விதமாக இருப்பார்கள்.

ஒரு ராஜா இருந்தார். அவருடன் வேறு ஒருவரும் குதிரை மீது ஏறி நாட்டின் எல்லைப் புறத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம் என்று புறப்பட்டார்கள். குதிரைகள் களைத்து விட்டன. அதனால் ஒரு குளத்தின் ஓரமாக நிறுத்தி அவற்றிற்கு நீர் கொடுத்தனர். அந்தக் குளத்தின் ஓரமாக ஒரு குடிசை இருந்தது. அந்தக் குடிசைக்குள் ஒரு பெண் அழும் சத்தம் கேட்டது.

உள்ளே போய்ப் பார்த்தால் அந்தப் பெண் தூக்கு மாட்டிக் கொள்ள கயிற்றைக் கட்டிக் கொண்டிருந்தார். ராஜாவுடன் கூட இருந்தவர் உடனே ஓடிப்போய் அந்தக் கயிற்றை வெட்டிவிட்டு "ஏனம்மா இப்படி ஒரு முடிவுக்கு வந்தாய்?" என்று கேட்டிருக்கிறார். "என் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் தான் இப்படிச் செய்தேன்" என்றாள் அந்தப் பெண். "உனக்கு அப்படி ஒரு நிலை வராதம்மா! ஏனென்றால் இப்போது இருக்கும் நமது ராஜா மிகவும் நல்லவர். அதுமட்டுமல்ல மிகவும் திறமையான ஒருவர். நமது நாட்டுப் படைகளுக்குத் தளபதியாக இருக்கிறார். அதனால் உனக்கு ஒரு கஷ்டமும் வராது! தைரியமாக இரு!" என்றார். "அப்படி இல்லை! எனக்குக் கஷ்டம் கொடுப்பதே நீங்கள் கூறும் அந்தத் தளபதிதான்" என்றார் அந்தப் பெண். இதை அந்த ராஜா குடிசைக்கு வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்தார்.

மறுநாள் கையும் களவுமாக அந்தத் தளபதியைப் பிடித்தார். கோபமாகப் பார்த்தார். "தளபதியே! என்னுடைய ஆட்சியில் என்னுடைய அதிகாரிகளே இப்படி நடந்து கொள்வதை என்னால் சகித்துக் கொள்ளமுடியாது! இந்த நிமிடமே உன்னை வேலையிலிருந்து நீக்குகிறேன். இந்த நாட்டின் எல்லைக்குள் நீ இருக்கவே கூடாது! உடனே வெளியேறு" என்று உத்தரவிட்டார்.

உடனே பக்கத்தில் இருந்தவர் ராஜாவைப் பார்த்து சொன்னார் "மன்னா! இந்தத் தளபதி மிகவும் திறமையானவர். அப்படிப்பட்ட ஒருவரை நாம் இழப்பது நல்லதல்ல! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்" என்றார். அதற்கு அந்த ராஜா என்ன சொன்னார் தெரியுமா? "நீ சொல்வது சரிதான்! இருந்தாலும் ஒரு நல்ல தளபதியை நாம் இழந்துவிட்டால் வேறு ஒரு நல்ல தளபதியை நாம் கண்டுபிடித்துவிடலாம்! ஆனால் ஒரு பெண்ணுக்கு அநீதி நடந்துவிட்டால் அதன் பின் நமது புகழ் என்ன ஆகும்?" என்றார். அப்படிச் சொன்ன அந்த ராஜா யார் என்று நினைக்கிறீர்கள்? வீர சிவாஜிதான் அப்படிச் சொன்னார்.

இப்படிப்பட்ட மன்னர்களும் இந்த உலகத்தில் இருந்திருக்கிறார்கள். இதற்கு நேர்மாறான மன்னர்களைப் பற்றியும் சுவாரஷ்யமான சில கதைகள் உண்டு. அப்படித்தான் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு சொந்தமாக யோசிக்கும் திறமை மிகவும் குறைவு! அவரது காலில் அக்கி வந்துவிட்டது. 'கடி', 'படை' என்று சொல்வார்களே! அதுபோல் மிகவும் தொந்தரவாக இருந்தது.

உடனே அரண்மனை வைத்தியரைக் கூப்பிட்டார். "இதற்கு என்ன செய்யலாம்" என்று யோசனை கேட்டார். "இது என்ன பெரிய காரியம்? பொடுதலையை வைத்துக்கட்டினால் சரியாகிவிடுமே!" என்றார் வைத்தியர். அப்படிக் கூறிவிட்டு அவர் போய்விட்டார். அது ஒரு பச்சிலை. வைத்தியர் போன பின்பு ராஜாவுக்கு ஒரு சந்தேகம் வந்தது! "அது சரி... இந்த வைத்தியர் பொடுதலை என்று சொன்னாரே... அப்படியென்றால் என்ன?" என்று! அது ஒரு பச்சிலை என்பது அவருக்குப் புரியவில்லை.

உடனே ஒரு புலவரைக் கூப்பிட்டார் ராஜா. அவரிடம் "பொடுதலை என்றால் என்ன?" என்று கேட்டார். அவர் யோசித்துப் பார்த்துவிட்டு பொடுதலை என்றால் 'முடி இல்லாத தலை' என்று விளக்கம் கூறிவிட்டுப் போய்விட்டார். உடனே ராஜா தளபதியைக் கூப்பிட்டார். "நமது நாட்டில் தலையில் சுத்தமாக முடியில்லாத ஒருவனைப் பார்த்துக் கூட்டிக்கொண்டுவா" என்று உத்தரவீட்டார்.

அப்பாவியாக ஒருவன் கிடைத்தான். அழைத்துக்கொண்டு வந்தார்கள். "என்னை எதற்கு அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போகிறீர்கள்?" என்று கேட்டான் அந்த ஆள். "ராஜாவுக்கு காலில் அக்கி அதற்கு பொடுதலையை வைத்துக் கட்ட வேண்டும் என்று அரண்மனை வைத்தியர் கூறிவிட்டார். அதுதான் உன்னை அழைத்துக்கொண்டு போகிறோம். உன் தலையைத்தான் வைத்துக் கட்டப் போகிறோம்" என்று சொன்னான் அரண்மனைச் சேவகன்.

அந்த ஆளுக்கு ஒரு திடீர் அதிர்ச்சி. அதன்பின் மெதுவாக சமாளித்துக்கொண்டு "அது சரி! இந்த யோசனையை சொன்ன அரண்மனை வைத்தியர் வீடு எங்கிருக்கிறது?" என்று கேட்டான். வீட்டைக் காட்டினார்கள். உடனே இந்த ஆள் அந்த வீடுள்ள திசையைப் பார்த்து சாஷ்டாங்கமாக கீழே விழுந்து நமஸ்காரம் செய்தான். அங்கிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. "ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த ஆள் "இன்று இப்போது நான் உயிரோடு இருப்பதற்கே அந்த வைத்தியர் தான் கும்பிட்டேன்" என்றான்.

"எப்படி?" என்று கேட்டார்கள். "நல்லவேளை அந்த வைத்தியர் நமது ராஜாவிடம் பொடுதலையை வைத்துக் கட்டுங்கள் என்று மட்டும் சொன்னார். பொடுதலையை நசித்து வைத்துக் கட்டுங்கள் என்று சொல்லியிருந்தால் என் கதி என்ன ஆவது?" என்றான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# பொதுக்கட்டமைப்பை சபையில் சமர்ப்பிக்கும் ஜனாதிபதியின் முயற்சி பொறுப்பற்ற செயலாகும்

## சுட்டிக்காட்டுகிறார் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு என்பது சட்டமூலமோ அல்லது சட்டதிட்டமோ அல்ல என்பதனால் அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு யோசனை கூறுவது நகைப்புக்குரிய விடயம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.



பொதுக்கட்டமைப்பை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சியானது பொறுப்பை மீறும் செயல் எனவும் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

அடுத்த வாரம் பொதுக்கட்டமைப்பை சட்டமூலமாகவோ சட்டதிட்டமாகவோ பாராளுமன்றத்தில் அரசு சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளது. தமது பொறுப்பில் இருந்து விலகுவதற்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சியாகவே இதனை நாம் கருதுகின்றோம்.

இலங்கையின் அரசியல் சாசனத்தின் படி நிறைவேற்று அதிகாரத்திற்கென பொறுப்புகளும் கடமைகளும் உள்ளன. அதேபோன்று பாராளுமன்றத்திற்கென சில தனியான சட்டதிட்டங்களும் உள்ளன. இவை இரண்டுக்கும் இடையே தெளிவான வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

ஆனால் பாராளுமன்ற நடவடிக்கைகளை நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு மேற்கொள்ள முடியாது. அதேபோல் நிறைவேற்றுப் பொறுப்புகளை பாராளுமன்ற நடைமுறை மூலம் செயற்படுத்த எதுவித சந்தர்ப்பமும் இல்லை. இது தொடர்பான தீர்மானத்தை எடுக்க வேண்டிய பொறுப்பு அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு என்றும் குறிப்பிட்டார். (ந-8)

## திருமலையில்

# புலிகளின் பிரதேசங்களுக்கு பொலிஸார் செல்லத்தடை

(திருமலை)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்லமாட்டோம். அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசிக்கமாட்டோம் எனத் திருமலை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் கடமையாற்றும் அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களும் அவர்களின் கையொப்பமிடப்பட்ட கடிதங்களை கையளிக்கவேண்டும் என திருமலை பிரிவிற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

திருமலை மூதூர் பொலிஸில் கடமையாற்றிய அமல் பிரசன்ன எனும் பொலிஸ் கான்ஸ்டபிள் உப்பாறுப் பிரதேசத்தில் வைத்து விடுதலைப்புலிகளினால் கைதுசெய்யப்பட்டமையே இவ்வாறு அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்தும் கடிதங்களைக் கோருவதற்குக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விரு நிபந்தனைகள் தவிர அனுமதியின்றி பொலீஸ் நிலையத்தை விட்டு செல்ல மாட்டேன் என்றும் எழுதி கையெழுத்திடுமாறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ந-4)

## கொழும்பில்

# பௌத்த பிக்குமார் மீது தாக்குதல் நடத்த திட்டம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை, புறக்கோட்டைப் பகுதிகளுக்கு தங்களின் தனிப்பட்ட தேவைகளுக்காகச் செல்லும் பௌத்த பிககுகள் மீது தாக்குதல் நடத்தச் சிலர் திட்டமிட்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் தனிப்பட்ட தேவைகளுக்காக கொழும்பிற்குச் செல்லும் பிக்குமாருக்கு பூரண பாதுகாப்பினை வழங்க பொலிஸார் நடவடிக்கை எடுத்திருப்பதாக கொழும்பு மத்திய பிரதேசத்திற்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக கொழும்பு கோட்டை, புறக்கோட்டைப் பகுதிகளில் பிக்குமார் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களால் நாளாந்தக் கடமைகள், வியாபார நடவடிக்கைகள் என்பன பாதிக்கப்பட்ட காரணங்களாலேயே கொழும்பிற்குச் செல்லும் பௌத்த பிக்குகள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாக தங்களுக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் சம்பிக்க சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதனால் கொழும்பு கோட்டை, புறக்கோட்டைப் பகுதிகளில் பௌத்த பிக்குமார் தமது தேவைகளை நிறைவேற்றச் செல்கையில் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிக்குமாரின் பாதுகாப்பிற்காகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

# ஆழிப்பேரலையால் உயிரிழந்தோரின் உடற்பாகங்கள் மக்கள் பார்வைக்கு!

(கொழும்பு)

அம்பலாங்கொட, தெல்வத்தை, பாராலிய ஆகிய பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் உடற்பாகங்கள் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை அவற்றைப் பார்வைக்கு வைக்க காலி கராப்பிட்டிய வைத்தியசாலையின் சட்ட மருத்துவப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த உடற்பாகங்கள் யாருடையது? என அறிந்து கொள்வதற்காகவே அவை பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

கடந்த ஜனவரி,பெப்ரவரி மாதங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களின் தலைமயிர்,எலும்புகள் என்பனவும் உயிரிழந்தவர்களின் ஆடை,அணிகலன்களும் உறவினர்கள் அடையாளம் காண்பதற்காகப் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

இவற்றை அடையாளம் காண வருவோர் உயிரிழந்தவர்கள் அண்மையில் எடுத்த புகைப்படங்களையும் அவர்கள் பற்றிய அதிக தகவல்களையும் எடுத்துவருமாறு வைத்தியசாலை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.(ந)

# யாழில் இந்து மாநாடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றப் பொன் விழாவையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றமும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடாத்தும் இந்து மாநாடு எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

"இலங்கையில் இந்து சமயம்" எனும் தொனிப்பொருளில் நடாத்தப்படவுள்ள இம் மாநாடு 15ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாகி 17ஆம் திகதி பி.ப 4.00 மணிவரை நடைபெறும்.

அகில இலங்கை இந்து மாமன்றப் பொன் விழாவை முன்னிட்டு ஒழுங்குசெய்யப்பட்டுள்ள பிராந்திய மாநாட்டுத் தொடரில் இம் மாநாடு யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்தும் ஏனைய பிராந்தியங்களிலும் மாநாடு ஒழுங்குசெய்யப்படவுள்ளது.

இவ் இந்து மாநாட்டில் இலங்கையில் இந்து சமய வரலாறு,பண்பாடு,வழிபாடு,வாழ்வியல்,மெய்யியல், விஞ்ஞானம், கலை, கல்வியியல் என்ற அடிப்படையில் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டு ஆராயப்படவுள்ளன.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை என்பவற்றில் கற்கும் ஆசிரிய மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை மையமாகக் கொண்டே இம் மாநாடு நடாத்தப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் யாழ். மாவட்டத்தைச சேர்ந்த கல்விமான்கள் மற்றும் ஆய்வாளர்களும் இம்மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிப்பர்.

இம் மாநாட்டில் பங்குபற்றவுள்ள பேராளர்கள் தமது விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் 'பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம், 91/5, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை ,கொழும்பு-02' அல்லது 'பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### சுனாமியால் பாதிப்படைந்த
## இந்து ஆலயங்கள், நிறுவனங்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(கொழும்பு)

சுனாமியால் பாதிபபுக்குள்ளான இந்து ஆலயங்கள், நிறுவனங்களை புனரமைக்க இந்து கலாசார அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுளளார்.

எனவே, சுனாமியால் பாதிப்புக்குள்ளான கோயில்கள், இந்துமத நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் மற்றும் சிறுவர் இல்லங்கள் போன்றவற்றின் நிர்வாகிகளை உடனடியாக இந்துக கலாசார அமைச்சுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளான கோயில்கள நிறுவனங்கள் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பான சேதவிபரங்கள் பற்றிய அறிக்கைகள் மற்றும் இவற்றைத் திருத்துவதற்காகும் உத்தேச மதிப்பீட்டு செலவினங்கள், வரைபடங்கள் போன்றவற்றை உடனடியாக அமைச்சு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி இந்து கலாசார அமைச்சின் மதியுரைஞரும் சட்டத்தரணியுமாகிய மகேஸ்வரி வேலாயுதம் விடுத்துள்ளார். மேலுமம ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான மேலதிக ஆதரங்கள் (பொலிஸ் முறைப்பாடு, கிராம சேவகரின் அறிக்கை) இருப்பின் அவற்றையுமம சேர்த்து உடனடியாக அனுப்பி வைக்கும்படி கேட்கபபட்டுள்ளது.

இவற்றை இந்து கலாசார அமைச்சு இல.64, காலி வீதி, கொழும்பு -03 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அமைச்சின் ஊடக இணைப்புச் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே, இந்து கலாசார அமைச்சால் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆலயங்கள், நிறுவனங்கள தொடர்பான தகவல்கள் திரட்டபபட்டது, இவற்றின் நிர்வாகிகள் தமது நிறுவனங்களுக்கேற்படட சேதவிபரங்களை மேற்கூறியவற்றுடன் உடனடியாக சமாப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது. பாதிப்புக்குள்ளான இவ் ஆலயங்கள், நிறுவனங்களை மீளப்புனரமைக்கும் நோககிலேயே இக்கோரிக்கை விடப்பட்டுள்ளதாக அமைச்சினால் வெளியிடபபட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## பொதுக்கட்டமைப்பு அவசியம் என்கிறார் பிரிட்டன் அபிவிருத்தித்துறை அமைச்சர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் சுனாமியால பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒருங்கிணைந்த நிவாரண பொருள் விநியோகம் இடம்பெற வேண்டுமானால் சுனாமி முகாமைத்துவ அமைப்பு ஒன்று அவசியமாகும் என்று பிரிடடினின அபிவிருத்தித்துறை அமைசசா ஹெரத் தோமஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாநாடு ஒன்றில் உரையாற்றுகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பிரிட்டனின் சகலவித உதவிகளும் இலங்கை அரசாங்கத்திடம் மாத்திரமே ஒப்படைக்கப்படும் என்றும் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் அவை வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கமாக பிரிட்டன் கருதி வருகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின வாழ்க்கையில் வறுமை நிலையை இல்லாதொழிக்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பாராட்டிய பிரிட்டிஸ் அமைச்சர் இதுவரை 7கோடி 30 இலட்சம் டொலர் பெறுமதியான உதவிகளை பிரிட்டன வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## மனித மூளையின் செல்களை சோதனைச்சாலையில் வளர்க்கலாம்!

மனித மூளை செல்களை சோதனைச் சாலையில் வளர்க்கலாமாம்.

அமெரிக்காவின் விஞ்ஞானிகள் மனித மூளை செல்களை சோதனை சாலையில வளர்த்துக் காட்டியுள்ளனர்.

அமெரிக்காவின 'பிரெய்ன் இன்ஸ்டடிடியூட்' எனும் மூளை ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் குழு புதிய பரிசோதனைகள் செய்துள்ளனர். இதன்படி மனித மூளையின் நன்கு வளராத ஸ்டெம் செல்களை சோதனை சாலையில் வளர்த்து முழு வளர்ச்சி அடையச் செய்யலாம்.

மனித உடலுக்கு வெளியே ரத்த செல்களை வளர்க்கும் விஞ்ஞான தொழில் நுட்பம் புழக்கத்தில் உள்ளது.

அதுபோல மனித மூளையின் ஸ்டெம் செல்களையும் சோதனை சாலையில் படிப்படியாக வளர்த்து முழுமை பெறச் செய்யமுடியும்.

பிற்காலத்தில் பார்க்கின்சன் நோய் மற்றும் வலிப்பு நோய் ஆகியயவைகளைக் குணமாககும் மருததுவ சிகிச்சை முறைக்கு இந்த மூளை செல்லைச் சோதனை சாலையில் வளர்க்கும் யுக்தியைக் கையாளும் முறை வழிவகுக்கும்.

ஆனால் அந்த நாள் நடைமுறைக்கு வர இன்னும் பல காலம் பிடிக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். (ற)

# நல்லூர் பிரதேச சபை
# வேலைகளிற்கான கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் இக்ராட் (ICTAD) தரம் M-9 பதிவுச்சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 20.06.2005 திகதி தொடக்கம் 29.06.2005 திகதி பி.ப. 3.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :- 01.07.2005 ந.ப. 12.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி :- 01.07.2005 பி.ப. 2.30 மணி.
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் பேதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருக்கவேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை செயலாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப் படாத வற் வரி |
|---|---|---|---|---|
| 01. | புனர் நிர்மாணம், பொது நூலகம் கோண்டாவில் | 4750.00 | 500.00 | 75.00 |
| 02. | ஸ்ரீ அம்மாள் வீதி கொக்குவில் மேற்கு கல்லிட்டுத்தாரிடல் | 4800.00 | 500.00 | 75.00 |
| 03. | குளங்கரை வீதி கோண்டாவில் கல்லிட்டுத்தாரிடல் | 1450.00 | 500.00 | 75.00 |
| 04. | பொதுக்கிணறு நீர்தாங்கி திருத்தம் குடியேற்றத்திட்டம் திருநெல்வேலி | 3300.00 | 500.00 | 75.00 |

தலைமை அலுவலகம்,
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
17.06.2005

பொன்னையா வைரமுத்து
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(C/1447)

### தேசிய எழுச்சிப் பேரவையின் தேசிய மாநாடு

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்ப்பாண மாவட்ட பேராளரின தேசிய மாநாடு 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தில் நாளை நடைபெறவிருககின்ற தமிழீழ தேசியத்தின் குரல் என்ற நிகழ்வின் காரணமாகவே இம் மாநாடு பின்போடப்பட்டுள்ளது.

இதில் அனைத்துப் பேராளர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு தேசிய எழுச்சிப் பேரவையில் யாழ்.மாவட்டச் செயலாளர் சூ.சிறில் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

### பொங்கல் விழா

தென்புலோலி அருள்மிகு தோட்டத்து ஞானவைரவர் ஆலய பொங்கல் விழா இன்று சனிக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-52)

## பொருளாதாரம் முக்கியதுறைகளில் முன்னேற்றம் - மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

நாட்டின் பொருளாதரத்தின் முக்கிய துறைகளில் துரிதவளர்சசி காணப்பட்டுள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

பெருமளவு நெல் இந்த வருட பெரும்போக அறுவடை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தேயிலை உட்பட ஏனைய பொருட்களின் ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் 4 மாத காலப்பகுதியில் தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி 11.8சதவீதமாக அதிகரித்துள்ளமையும் குறிபபிடத்தக்கது.

வர்த்தக துறையில் துண்டு விழும் தொகை 67 கோடி 50 இலட்சமாகக் குறைவடைந்துள்ளது.

சுறறுலாப் பயணிகளின் வருகையும் முதல் 5 மாத காலப்பகுதியில 8 சதவீத அதிகரிப்பைக் காண்பித்துள்ளது என்று மத்திய வங்கியின அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

## எயிட்ஸை குணப்படுத்தும் தேங்காய் எண்ணெய்

### ஆய்வில் புதிய தகவல்

தேங்காய் எண்ணெயில் இருக்கும லோரிக் அமிலம் எயிட்ஸ் நோயை உண்டாக்கும் வைரஸ் கிருமிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது என்று சமீபத்தில் நடந்த பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்தியாவில் அதிக அளவில தேங்காய் எண்ணெய் பயன்படுத்துவது கேரளாவில்தான். தொடாந்து தேங்காய் எண்ணெய்யைப் பயன்படுத்தினால் அதிகப்படியான உடல் எடை, உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்ற பிரச்சினைகள் ஏற்படும் என்று ஒரு தரப்பினர் இதுவரைக்கும் கூறிவந்தனர். ஆனால், சமீபத்தில் வெளியான ஆராய்ச்சி முடிவுகள் இதற்கு நேர் மாறாக இருக்கின்றன.

இதுகுறித்து ஜகார்த்தாவைச் சேர்ந்த ஆசிய பசிபிக் தேங்காய் சமுதாய செயல் இயக்குனர் டாக்டர் ரத்தினம் வெளியிட்ட தகவல்கள் வருமாறு,

தேங்காய் எண்ணெயில் 40.6 சதவீதம் லோரிக் அமிலம் உள்ளது. இந்த லோரிக் அமிலம் உடலில் இருக்கும் எயிட்ஸ் கிருமிகளைப் பரவவிடாமல் தடுக்கும் ஆற்றல் கொண்டது. இந்த ஆராய்ச்சி குறைந்த நிதியுடன் சிறிய அளவில் நடந்திருக்கிறது. எயிட்ஸைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் தேங்காய் எண்ணெயக்கு உண்டு என்ற விழிப்புணர்வு அதிக அளவில ஏற்பட்டு விட்டால் தற்போதைய உற்பத்தி போதுமானதாக இருக்காது.

கடந்த 22 ஆண்டுகளாக 4 கோடியே 40 லட்சம் பேர் உலகம் முழுவதும் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், 72 இலட்சம் பேர் ஆசிய - பசிபிக் நாடுகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். அழகு சாதனப் பொருளாகவும், வலி நிவாரணியாகவும் தேங்காய் எணணெய் பயன்படுகிறது. இவ்வாறு டாக்டர் ரத்தினம் கூறினார்.

ஏற்கனவே, அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானி டாக்டர் ஜோன் கபாரா, எயிட்ஸ் பாதித்த சில நோயாளிகளுக்கு தேங்காய் எண்ணெய் கொடுத்து பரிசோதனை செய்து பார்த்துள்ளார். அதேபோல பிலிப்பைனசிலும் பரிசோதனை நடநதிருக்கிறது. ஆனால், இவர்கள் இருவரும், இது போதாது இன்னும் கூடுதலாக எயிட்ஸ் நோயாளிகளுக்கு தேங்காய் எணணெய் தொடர்ந்து கொடுத்துப் பரிசோதித்த பிறகே உறுதியாகக் கூறமுடியும் என்று கூறுகின்றனர். (ற)

## மேல் மாகாணத்தில் போலி ஆவணங்கள் தயாரிப்பு குற்றத்தடுப்புப் பணியகப் பொறுப்பதிகாரி தகவல்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம், மொறட்டுவ பல்கலைக் கழகம் ஆகியவற்றின் ஆவணங்களைப் போலியாகத் தயாரிக்கும் மோசடி நெடுநாட்களாகத் தொடர்வதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன என குற்றத் தடுப்புப் பணியகத்தின் நிலையப் பொறுப்பதிகாரி ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பட்டபடிப்புச் சான்றிதழ்களைப் போலியாகத தயாரித்து விநியோகித்த எல்மோ பெரேரா என்ற சந்தேக நபரை விசாரித்த போது இவ்விடயங்கள் புலனாகியுள்ளன.

இந்தச் சான்றிதழ்களைப் பெறற நபர்கள் பற்றிய விசாரணைகளும் தொடங்கப்பட்டிருப்பதாகக் குற்றத் தடுப்புப் பணியகத்தின் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவிததுள்ளார்.

தேசிய பாடசாலைகளுக்காக இப்போலி ஆவணங்களைத் தயாரித்த இந்தச் சந்தேக நபரை பிரியந்தலைப் பிரசேத்தில் வைத்துப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு கல்கிசை நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-2)

## வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமையால் ஜே.வி.பி நழுவல் என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

14 மாதங்களுக்கு முன்னா மக்களிடம் எண்ணற்ற பொய வாககுறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி இன்று அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் தமது இருப்பைப் பாதுகாததுக் கொள்வதற்காக அரசாங்கத்தை விட்டுவிலகியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயகக கருத்து தெரிவிக்கையில்,

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாமல போனதால் இன்று மக்கள் மத்தியில் ஜே.வி.பி குறித்து ஏற்பட்டு வரும் அதிருப்தியை சமாளிக்கும் வகையிலேயே பொதுக்கட்டமைப்பு பற்றி கூறிக்கொண்டு அரசாங்கத்தை விட்டு விலகியுள்ளனர்.

14 மாதங்களுக்கு முன்னர் அவர்களை நம்பி ஆட்சியை ஒப்படைத்த மக்களை நடுக்கடலில் விட்டுச்செல்லும் இந்தச் செயல் கோழைததனமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (அ-9)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ. திருநாவுக்கரசு 25

''சிங்கள பௌத்த மேலாதிக்க உணர்விலிருந்து ஏனைய சிறுபான்மைச் சமூகங்களைப் பாதுகாக்கப் பிரித்தானியர் ஓர் அரசியல் யாப்பை இங்குவிட்டுச் செல்லவில்லை இதனால் அரசியல் அதிகாரம் இந்நாட்டின் இனங்களுக்கு இடையிலே சமமாகப் பங்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக இந்நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தவரான சிங்கள மக்களிடையே சென்றது. இத்தகைய நிலை சிறுபான்மை மக்கள் ஆதரவின்றிச் சிங்கள- பௌத்த கோஷத்துடன் அரசியலாதிக்கத்தைக் கைப்பற்றிப் பெரும்பான்மை அரசியல் கட்சிகளுக்கு வாய்ப்பளித்தது இதன் விளைவே சிறுபான்மையினர் நலன்களுக்கெதிராக இவர்களால் மேற்கொள்ளப்பட்ட பலவகை நடவடிக்கைகளாகும். இந்நட்வடிக்கைகளுக்கெதிராகத் தமிழ்மக்கள் தங்கள் நலன்களைப் பாதுகாக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளே நம் நாட்டு இனப்பிரச்சினையாகும். இன்று இது சர்வதேசப் பிரச்சினையாகியுள்ளது.''

என சி.க. சிற்றம்பலம் அவர்கள் இனப்பிரச்சினையின் சாராம்சத்தைக் கூறியிருப்பது பொருத்தமான கருத்தாகும். இலங்கைத் தேசியமானது பேரினவாத நோக்கில் சிங்களத் தேசியமாகச் செயற்படும்போது அதற்கு மறுதலையாகத் தமிழ்த்தேசியமும் தோற்றம் பெற்றது. மறுக்கவொண்ணா உண்மையாகும். சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தின் நடவடிக்கைகள் தமிழ்பேசும் மக்களுக்குப் பாதகமான விடயங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஒடுக்கப்படும் தமதுரிமைகளைப் பெரும்பான்மையினரிடம் இருந்து பெற்றுக்கொள்ளவும் இந்தத் தமிழத்தேசியவுணர்வு கட்டி எழுப்பப்பட்டது. முன்னையதன் நிறுவனமயத்தைப் போலவே இதுவும் நிறுவனமயமாக முயற்சி செய்தது சிங்கள பௌத்தத்தைப் போலவே பண்டைய வரலாறுகளிலும் ஐதீகங்களிலும் சரண் புகுந்து அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களை உணர்ச்சி கொள்ளச் செய்தது.

ஆரம்பத்தில் அரசியல் உரிமைகளைக் காப்பாற்ற முனைந்து பின்னர் பல்துறைகளிலும் போராட வேண்டிய சூழ்நிலைக்குத் தமிழ்த்தேசியவாதிகள் தள்ளப்பட்டனர்.

''அரசியல் போராட்டம் வாழ்க்கையின் எல்லாத்
துறைகள் மீதும் படையெடுக்கிறது. உணர்வின்
சகலவடிங்களிலும் ஊடுருவிச் செல்கிறது.
உண்மையில் புராதன சமுதாயத்தைத் தவிர
சமூகவாழ்வு முழுவதும் அரசியல் நல உரிமைகளும்
அரசியல் போராட்டமும் ஊடுருவிப் படர்ந்திருக்கின்றன.''

என்னும் கூற்றிற்கு ஒப்ப தமிழருடைய போராட்டமானது இலங்கையில் அவர்களது வாழ்வியலின் பல்வேறு நிலைகளிலும் ரெும்பான்மையினர் அரசினை எதிர்த்துப் போராடவைத்துள்ளதெனலாம். இதற்கான அடிப்படைக் காரணம் அவர்களது அரசியலுரிமைகள் பறிக்கப்பட்டமையே ஆகும்.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பிரித்தானியருக்கெதிரான நடவடிக்கையாக தமிழ்-சைவ மறுமலர்ச்சிக்கு வித்திட்டதன் மூலம் தேசிய உணர்ச்சியைத்தட்டியெழுப்பினார். இருந்தபோதிலும் அக்காலத்தில் ''நாம் இலங்கையர் என்ற மனப்பாங்கே மேலோங்கி நின்றது. ஆனால் 1921இல் இலங் கைத் தேசிய காங்கிரசில் இருந்து வெளியேறிய தமிழர்கள் சேர் பொன் அருணாசலம் தலைமையில் இலங்கைத்தமிழர் மகாஜன சபையை அமைக்கும்போது இலங்கைத்தேசியம், முதலாவது முறையாகச் சுட்டிக்காட்டத் தக்க வகையில் இரண்டாகப் பிளவு பட்ட தெனலாம். சமூக மேம்பாட்டுக்கென யாழ்ப்பாணத்தில் 1920நடுப் பகுதியில் தோற்றம் பெற்ற ''யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் அதே ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றம் பெற்றது. அது அக் காலத்திலும் தமிழ்-சிங்கள ஐக்கியத்தையே நாடிநின்றது. இருந்தும் சிங்களப் பேரினவாத அச்சுறுத்தல்களுக்கும் ஏமாற்றுதல்களுக்கும் எதிராக 1931இல் நடைபெற்ற முதலாவது அரசாங்க சபைத் தேர்தல்களைப் பகிஷ்கரித்து அதன் மூலம் வடக்கில் 4 தேர்தற்தொகுதிகளை வெற்றிடமாக்கியதை ஏற்கனவே நாம் அறிந்துள்ளோம் இந்த வகையில் தமிழ்த்தேசியவாதத்திற்கு உரமூட்டியதாக யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸைக் கருதமுடியும்.


ஏற்கனவே மன்னாரில் போட்டியிட்டுத் தோல்வியுற்றபின் யாழ்ப்பாணத்தில் பகிஷ்கரிப்பின் காரணமாக வெற்றிடமாயுள்ள இடங்களுக்கு நடைபெற்ற இடைத் தேர்தல்கள் மூலம் பருத்தித்துறைத் தொகுதியில் வெற்றிபெற்று பாராளுமன்றத்திலும் அரசியலிலும் புகுந்தார். ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' என்ற கோஷமும் ஓங்கியொலிக்கத் தொடங்கிற்று இதைத் தொடர்ந்து 1936 இல் நடைபெற்ற 2வது அரசாங்க சபைத் தேர்தலில் தனிச்சிங்கள மந்திரிசபை அமையக்கண்டு தமிழ்த்தேசியவாதத்தின் தேவையும் ஆதரவும் அதிகரித்துச் சென்றது. இதன் காரணமாகவே பொன்னம்பலம் சோல்பரிக் குழுவினர் முன் 50:50 கோரிக்கையை முன்வைத்தராயினும் அதனைக் குழுவினர் ஏற்றுக்கொள்ளாது சிறுபான்மையினரது பயங்களுக்கு எவ்விதத்திலும் ஆதாரமில்லையென்றும் கூறிவிட்டனர். பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் பெரும்பான்மையினருக்கு 50வீதமும் ஏனைய சிறு பான்மையினர் அனைவர்க்குமாக 50 வீதமும் இருக்க வேண்மென்ற பொன்னம்பலத்தின் கோரிக்கை நிரர்கரிக்கப்பட்டபின்னரே அவர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசை 1944இல் தொடங்கினார். 1946இல் ஐக்கிய தேசியக் கட்சியை ஸ்தாபித்த டி.எஸ். சேனநாயக்கா, சோல்பரி அரசியற்றிட்டத்தின் முதற்தேர்தலில் வெற்றியீட்டினார். அந்த அரசின் அமைச்சரவையில் தமது தமிழ்த்தேசியத்தை ஓரங்கட்டி வைத்துவிட்டு ஜி.ஜி. பொன்னம்பலம் அமைச்சரானார். பொன்னம்பலத்தின் தலைமையிலான அரசியல் கொழும்புத் தலைமையையும் யாழ்ப்பாணப் பகுதியில் தமிழ் உணர்வின் சுவீகரிப்பையும் கொண்டு ஓர் முழுமையற்ற தமிழ்த் தலைமைப்பீடாமாகவே விளங்கியது சுதந்திரதின் பிந்திய 1948, 1949ஆம் ஆண்டைய குடியுரிமைச் சட்டங்கள் இலங்கையில் வசித்த தமிழர்களில் ஏறக்குறைய அரைப்பகுதியினரை நாடற்றவராக்கும் நிலைமைக்குத் தள்ளிய போது இந்த தமிழ் காங்கிரசின் தலைமையானது அரசாங்கத்துடன் இணைந்து அதனை ஆதரித்தது. அதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஒரு குழுவினர் தமிழக் காங்கிரசிலிருந்து விலகவும், குடியுரிமைச் சட்டங்களை இடது சாரிகளுடன் சேர்ந்து எதிர்க்கவும் செய்தனர். எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கு. வன்னியசிங்கம், டாக்டர் ,ஈ.எம்.வி. நாகநாதன் போன்றவர்கள் தமிழ்க் காங்கிரசின் உறவைத் துண்டித்து 18.12.1949 இல் புதிய இலங்கைத் தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தனர். தமிழரசுக் கட்சியின் ஆரம்பத்துடன் தமிழ்த் தேசியவாதத்தின் போக்கிலே புதிய திருப்புமுனை ஏற்பட்டது. சிங்களவர் மத்தியில் இக்கட்சியானது சமஷ்டிக்கட்சி என்றே அடையாளம் காணப்பட்டது.

(தொடரும்)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## நயினை நாக பூசனி அம்மன் பாமாலை

### பதினொராம் திருவிழா



## காணிக்கைத் திருவிழா

இணையிலா கல்விகலை ஞானம் அளித்து
திணைக்களம் எங்கும்தகவோ– டிணைத் தென்றும்
மண்ணில் நல்வாழ்வு தரும் தாய்க்கு காணிக்கைத்
தண்டிகை உற்சவம் இன்று

சண்

## தாரணியே தயை கூர்ந்து அருள்வாயே

நாகத்தின் நீழலில் நயந்து உறையும் நயினை நாயகியே
நம்பிவரும் அடியவர் வினை தீர்க்கும் நம் நாகம்மாளே
அலைகடல் நடுவே கோயில் கொண்டு அபயம் தரும் அன்னையே
அமுதசுரபியாய் அன்னமும் அருளும் பாலிக்கும் அபிராமியே
ஆண்டாண்டு காலம் அழுது அல்லற்படுகின்றோம் தாயே
அந்த முகாரி ரா்கங்கள் உன்செவிக்கு எட்டலையோ அம்மா
ஆனிப்பூசத்தில் அடியார் அலைமோத எழிலாகத் தேரேறி நீ வருகையிலே
அன்புடன் காலடிகள், கரங்கள் எடுத்து வீதிவலம் வருகின்றோம்
ஆத்தாளே இனியும் வேதனைகள், சோதனைகள் வேண்டாம் தாயே
அவனியில் தமிழர் நாம் தலை நிமிர்ந்து வாழ தாரணியே தயைகூர்ந்து
அருளுவாயே.

மட்டுவில் சிவம்

## அழகு பூந்தண்டிகைத் திருவிழா

ஐயிரண்டு மொன்றும் இன்று திருவிழா
அருட் சின்னக் கற்களுக்கும் பெருவிழா
அலை கடலும் புயற்காற்றுமோய
அன்னையுடன் வாயுபட்சணி வீதியுலா
அனைவர்க்கு மன்னையருள் வேண்டி- நயினை
அரசபணியாளரேத்து தண்டிகைத் திருவிழா

''நயினையான்''

## சேயெனக் காத்தாள் திருமணி நாகபூசணியே

முந்தியாங் கரையைப் பந்தி நாலுய்ய
முன்னதாய் முரணலை மோதி
வந்திடா மாயவாரி தியதனில்
மயங்கி விழுந்தாழ்திடாவாறு
சத்தியாய் சிவாய்த்தனிப்பரம் தானே
தாலுமாய் நின்தற்பரையே
சித்தெலாம் வல்லாய் சேயெனக் காத்தாள்
திருமணி நாக பூசணியே

கு.மேகலா

## சீர்வளரத் தீவினை தீயும்

அலைகடல் வாய்த்திரை கொணர்ந்தெற்ற மாடே
அம்பிகை அடிக்கமலம் முத்தாலா ராதிக்க
நிலையாக நயினை அம்பதியுயர் கோவிலாக
நீடருள் புரிநாக பூசணி நாயகியார்
உலைந்தலையா துறைவிடம் புகுமடியார் உள்ளம்
உருகும் வண்ணம் உணவூட்டி ஊறுமன்பால்
சிலையால் புரம்சிதைத்த சிவனாரைச் சேவிக்கும்
திறங்காணப் பெற்றால் சீர் வளர்த்தீ வினைதீயும்

சிவ.சண்முகவடிவேல்

## நிக்கொட் உதவி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபைக்கு நிக்கொட் அமைப்பினால் நான்கு சக்கர உழவு இயந்திரமும் அதற்கான இழுவைப் பெட்டியும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நீர்விநியோகப் பணிகளுக்காக இவ்வமைப்பினால் பவுசர் ஒன்று வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-21)

## சேவைக்கால செயலமர்வு

(பொன்னாலை)

யாழ்.வலயக்கல்வி அலுவலகம் பாடசாலை மட்டச் சேவைக்காலச் செயலமர்வு ஒன்றை யாழ்-மத்திய கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடாத்தவுள்ளது.

இச் செயலமர்வுக்கு அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் அன்றைய தினம் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-49)

## கந்த முருகேசனாரின் 40வது நினைவு தினம்

(மருதங்கேணி)

தென்புலோலி மூதறிஞர் கந்தமுருகேசனாரின் 40வது சிரார்த்ததினம் அண்மையில் மந்திகையிலுள்ள அவரது சிலைக்கு முன்னால் மலர்மாலை அணிவித்து அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் பண்டிதர் பரந்தாமன், உதவி அரசாங்க அதிபா க.வீரகத்திப்பிள்ளை, ஆசிரியர் மு.கனகலிங்கம், புலோலி ப.நோ.கூ.சங்கத் தலைவர் வி.ஆறுமுகநாதன், பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் சி.பசுபதி ஆகியோா நினைவுப் பேருரை நிகழ்த்தினார்கள்.

இதேவேளை, தென்புலோலி புற்றளை மகாவித்தியாலதிலுள்ள அவரது சிலைக்கு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மாலை அணிவித்து சிரார்த்ததினத்தை அனுஷ்டித்தார்கள். (அ-35)

## மஹோற்சவம்

(பொன்னாலை)

உடுவில் ஸ்ரீ சிவஞான விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 12ஆம் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

பத்துத்தினங்கள் தொடர்ந்து நடைபெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ற-49)

## மதிப்பீடு

(பொன்னாலை)

பாடசாலை தொகை மதிப்பீட்டிற்கான படிவங்கள் வலயக் கல்வித் திணைக்களத்தினால் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் இரு பட்டோலைகள் அடங்கலாக போதுமான அளவு ஆசிரியர் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ற-49)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவு இடம்பெற உள்ளதால் அங்கத்துவத்தைப் புதுப்பித்தல், பிரேரணைகள் சமர்ப்பித்தல், தேர்தல் நியமனப் பத்திரங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றை 30.06.2005 ஆம் திகதி பி.ப.4.00மணிக்கு முன் நிறைவேற்றுமாறும், தலைவர் பதவி தவிர்ந்த செயலாளர், உபதலைவர், உபசெயலாளர், பொருளாளர் ஆகியவற்றுக்கு ஒருவர் இரு. பதவிகளுக்கு நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யலாம் எனவும் தலைவர் ந.சிவகடாட்சம் அறிவித்துள்ளார். (அ-74)

## நாட்டுப்பற்றாளர் சாவு

(கொழும்பு)

நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம ஒன்றில் நாட்டுப் பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் பொன்னையா சிவகாநதன் (துன்னாலை தெற்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம்) என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

# பேராசிரியர் துரைராஜாவின் 11 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

(பொன்னாலை)

யாழ்-பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் மாமனிதருமாகிய பேராசிரியர் துரைராஜாவின் 11 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் யாழ்-பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்-பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த புதன்கிழமை மாலை அனுஷ்டிக்கப்பட்டன.

யாழ்-பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உப-தலைவர் டேவிட் றொபின்சன் தலைமையில் இந்நினைவு நிகழ்வு நடைபெற்றது.

முன்னதாகப் பொதுச்சுடரினை யாழ்-பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ கற்கை நெறிகள் பீடாதிபதி தே.தேவராஜா, யாழ்-பல்லைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் கே.அருள்வேல், யாழ்-பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.தங்கராசா மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகளில் முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் துரைராஜாவன் உருவப்படத்திற்கு துணைவேந்தர் சுமோகனதாஸ் மலர்மாலை அணிவித்து நினைவுச் சுடர் ஏற்றிவைத்தார்.

யாழ்-பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளா எஸ்சிவாகரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து நினைவுரைகளை யாழ்-மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிஇளம்பரிதி, யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (ற-49)

## பொதுக்கட்டமைப்பு ஏற்படின்

## விடுதலைப்புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைய வழி பிறக்கும் – பௌத்த துறவிகள் அமைப்பு

(கொழும்பு)

சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பின் ஊடாக தேசத்தை பிளவுபடுத்துவதோ அரச அதிகாரத்தை ஆயுத பாணிக்குழுவிடம் ஒப்படைப்பதோ நிகழமாட்டாது என அகில இலங்கை பௌத்த துறவிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது ஒரு மனிதாபிமான செயற்பாடாகும் என அந்த அமைப்பு அறிக்கை விடுத்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை மனிதாபிமான தேவைகளை நிறைவேற்றுவது தமிழீழ விடுதலைப்புலிகள் இயககத்தை படிப்படியாக ஜனநாயக நீரோட்டததில இணைத்துக் கொள்வது, பிரிவினைக் கருத்துக்களை தோல்வியடையச் செய்வது, இலங்கையை ஒரே நாடாக அபிவிருத்தி செய்யும் நடைமுறையை முன்னெடுத்துச் செல்வது முதலான நோக்கங்களின் அடிப்படையிலேயே நிவாரண பொதுக்கட்டமைப்பை செயல்படுத்துமாறு அகில இலங்கை பௌத்த துறவிகள் அமைப்பு அரசாங்கத்தைக் கேட்டுளளது. (அ-9)

# தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த ஈ—சமூக அபிவிருத்தித் திட்டம்

## அரசு நடவடிக்கை, பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

மூன்று வருடகாலத்தில் தகவல் தொழிலநுட்ப அறிவு 50 சதவீதத்தினால் அதிகரிக்கப்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 'ஈ'-சமூக அபிவிருத்தி திட்டமொன்றை கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் தகவல் தொழில்நுட்ப அறிவின் விகிதாசாரம் 9.8 ஆகும். இலவசக் கல்வியின் தந்தை என வர்ணிக்கப்படும காலமசென்ற சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா பற்றி குறிப்பிடுகையில் அவரால் நடைமுறைக்கு இடப்பட்ட திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பது அவசியமாகவுள்ளது என்று தெரிவித்தார்.

இந்த உத்தேச திட்டத்தின் கீழ் கிராம பகுதிகளில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி ஏற்படுத்தவென 7 கோடி ரூபா செலவிடப்படவுள்ளதாகவும், அதேசமயத்தில் தகவல் தொழில் நுட்பத்தை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கென மேலும் 20 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதமா மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# பொலிஸ் நிலையங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பம்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் ஆகியவறறைத் தடுப்பதற்கு நாடளாவிய ரீதியில் புதிய செயற்திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்தவுடன் விரிவான துரிதமான விசாரணைகள் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருப்பதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சிசில் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்கள் தொடர்பான முறைப்பாட்டுப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நிவாரண விநியோக முறைகேடு; துரித விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம வழங்குவதில் ஊழல் மோசடிகளை மேற்கொண்டதாக குற்றம்சாட்டப்பட்ட அரச அதிகாரிகள் தொடர்பாக சமூக சேவைகள் அமைச்சு விசாரணைகளை ஆரமபித்துள்ளது.

இவ்வாறு குற்றம் சாட்டப்பட்ட 15 அரச அதிகாரிகள் தற்காலிகமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாக சமூகசேவைகள் பிரதியமைச்சர் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

இவர்களைவிட மேலும் 25 அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இவர்களில் பெருமளவானோர் கிராம சேவை உத்தியோகத்தவர்களாவர் என்றும் இவர்கள் தொடர்பாக அரச நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

## புதிய பெயர் வளைவு

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கு புதிய பெயர் வளைவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இதேவேளை இக்கல்லூரிக்கு சுமார் 80 அடி நீளமான புதிய கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்திற்கான நிதியை நிக்கொட் நிறுவனம் வழங்கியிருந்தது. இம்மாத இறுதிகுள் இக்கட்டடத் திறப்புவிழா இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-49)

## யு.என்.எச்.சி.ஆர் வீடுகள் அமைப்பு

(பொன்னாலை)

சுழிபுரம் - பாண்டைவெட்டைப் பகுதியில் அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனம் 40 வீடுகளை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது.

இவ் வீடுகள் அமைக்கும் பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யுத்தம் காரணமாக 1992ஆம் ஆண்டளவில் இடம்பெயர்ந்து, அண்மையில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கே இப்பகுதியில் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. (ற-49)

## கே.சி.சி.சி வெற்றிக்கிண்ண சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்டு வரும் கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டி இவ்வாண்டும் சிறப்பாக நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் யாவும் லீக் முறையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 23ஆம் திகதியாகும்.

ஜூலை 2ஆம் திகதி தொடக்கம் போட்டிகள் நடைபெறும். யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்த விளையாட்டுக் கழகங்கள் இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளலாம் எனவும் சுற்றுப் போட்டிக் குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (ற)

## வள்ளுவர் விழா

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச கரணவாய் இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் 19வது ஆண்டு வள்ளுவர் விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி பிரதேச சபை நெல்லியடி உப-அலுவலகப பொறுப்பதிகாரி எஸ்.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும் பெண்களுக்கான சைக்கிள்ளோட்டப் போட்டியும் அன்றையதினம் காலை நடைபெறவுள்ளன. (அ-52)

## நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனமும், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையும் இணைந்து முல்லைத்தீவிலுள்ள பாடசாலைகள் மட்டத்தில் "நாடகப் போட்டி"ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளன.

இதன் இறுதிநாள் நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணியம் பாடசாலையில் பிற்பகல் 3.00மணிக்கு ஆரம்பமாகும். (ற)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு திருப்பனந்தாழ ஆதனத்தில் இருந்து வருகை தரும் சைவ சித்தாந்த புலவர் கலாநிதி சோ.குமரேசமூர்த்தியின் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 21ஆம் திகதி பி.ப.5.30 மணிக்கு நல்லூர் கோவிலுககு முன்பாகவுள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர் "சமயம் உணர்த்தும் வாழ்வியல் நெறி" என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார். இந்நிகழ்வு இந்துசமய விவகார அலுவலகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-19)

## பிரதேச சபை நடவடிக்கை

(பொன்னாலை)

வலி-மேற்குப் பிரதேச சபையின் வட்டுக்கோட்டை உப-அலுவலகப் பிரிவில் இயங்கி வரும் பொதுச் சந்தைக் காணியை பிரதேச சபை சொந்தமாகக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த 5 வருடங்களாகக் குத்தகைக் காணியிலேயே மேற்படி சந்தை இயங்கி வருகின்றது.

தற்போது இச்சந்தைக் காணியை சபைககுச் சொந்தமாகக் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற-49)

# கம்போடியாவில் பணயக் கைதிகளாக இருந்த 28 பள்ளிக் குழந்தைகளும் ஆசிரியரும் மீட்பு

## ஒரு குழந்தை உட்பட 2 பேர் பலி; 3 பயங்கரவாதிகள் கைது

(பினாம்பென்)

கம்போடியாவில் 29 பள்ளிக்குழந்தைகளையும், ஒரு ஆசிரியரையும் பணயககைதிகளாக நான்குபேர் பிடித்துவைத்திருந்தனர்.


சர்வதேச அதிரடிப்படையினர் அதிரடியாய் அந்தப் பள்ளியில் நுழைந்து 28 குழந்தைகளையும் ஆசிரியரையும் மீட்டுள்ளனர். இந்த நடவடிக்கையின் போது கனடா நாட்டு குழந்தை ஒன்று பலியானது. குழந்தைகளை பணயக் கைதிகளாகப் பிடித்துவைத்திருந்த 4 பேரில் ஒருவன் சுட்டுக்கொல்லப்பட்டான்.

கம்போடியா நாட்டில் சியர் தீப் என்ற நகரில் சர்வதேச பள்ளிக்கூடம் ஒன்று உள்ளது. இந்தப் பள்ளியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த குழந்தைகள் படித்து வருகின்றனர். இந்த நகரில் வெளிநாட்டு நிறுவனங்கள் ஏராளமாக உள்ளன. நேற்று முன்தினம் காலை இந்தப் பள்ளிக்கு வந்த நான்கு பேர் 29 பளளிக்குழந்தைக்களையும், ஒரு ஆசிரியரையும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர். ஏதோ ஒரு நோக்கத்தறகாக இப்படிச் செய்த இவர்கள் தங்களிடம் இருந்த ஏ.கே.47 தானியங்கி துப்பாக்கியால் அனைவரையும் சுட்டுக்கொன்று விடுவோம் என்று எச்சரித்தனர். தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்றும் இவர்கள் கூறினர்.

இதுபற்றி பொலிஸாருக்குத் தகவல் தரபபட்டு சர்வதேச அதிரடிப்படை பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். தொலைபேசியில் பணயக் கைதிகளைப் பிடித்துவைத்திருந்த அந்த 4 பேரிடம் பொலிஸார் பேசினர். உடனே சரண அடையும்படி அவர்களைப் பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

அதன்படி சரண் அடைவது போல் பள்ளியை விட்டு வெளியே வந்த அந்த பயங்கரவாதிகள் நான்குபேரும் பள்ளியின் முன்னாள் இருந்த ஒரு வளாகத்தில் 2 குழந்தைகளை ஏற்றிக்கொண்டு தப்பி ஓட முயன்றனர். அப்போது பொலிஸாரை நோக்கி அவர்கள் சுட்டனர்.

இதனையடுத்து நடைபெற்ற அதிரடி நடவடிக்கையில் அந்த 4 பேரில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டான். மற்ற 3 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இந்த அதிரடி நடவடிக்கையின் போது கனடா நாட்டு பள்ளிக் குழந்தை ஒன்று துப்பாக்கிக் குண்டு பாய்ந்து பலியானது. பிறகு பள்ளியில் இருந்த 28 குழந்தைகளும், ஆசிரியரும் பத்திரமாக மீட்கப்பட்டனர். இச்சம்பவம் கம்போடியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)



பெரும் கம்பெனிகளில் தீப்பிடித்தால் எப்படி தீயை அணைப்பது என விளக்கமுறை பயிற்சியில் சீன தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ள காட்சி.

# அமெ.இல் நேற்று மீண்டும் நிலநடுக்கம்

## சுனாமி பீதியில் மக்கள்

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் வடக்குப் பகுதியில் கடந்த 15ஆம் திகதி காலையில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.2 புள்ளிகளாகப் பதிவானது.

இந்த நிலநடுக்கம் காரணமாக சுனாமி பேரலைகள் எழக்கூடும் என்று புவியியல் துறை எச்சரிக்கை விடுத்தது. இதனால் பரபரப்பு ஏற்பட்டதுடன் கடற்கரையோரப் பகுதிகளில் உள்ளவர்கள் பாதுகாப்பான இடம் தேடி ஓடினார்கள். ஆனால் சிறிது நேரத்தில் சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது.


இந்த நிலையில் கலிபோர்னியாவில் நேற்றுக்காலை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.3 புள்ளிகளாகப் பதிவானது. லொஸ்ஏஞ்சல்ஸ் நகருக்கு 126 கிலோ மீற்றர் கிழக்கே யுகைப்பாவில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.

நிலநடுக்கத்தில் கட்டடங்கள் லேசாக அதிர்ந்தன. வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கி விழுந்தன. சுனாமிப் பேரலைகள் எழக்கூடும் என்ற அச்சத்தில் பொது மககள் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடம தேடி ஓடினார்கள்.

கடந்த 2 நாட்களில் 2 தடவை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை அமெரிக்க மக்களை பீதியில் ஆழ்த்தி உள்ளது. கடந்த ஒரே வாரத்தில் 3 முறை கலிபோர்னியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டு இருப்பது குறிபபிடத்தக்கது. (ற)

# இந்திய–பாக். பிரச்சினை வெகு விரைவில் தீரும்

## -கலாம் உறுதி



(புதுடெல்லி)

இந்திய-பாகிஸ்தான் பிரச்சினை வெகுவிரைவில் தீரும் என்று தன்னைக் காணவந்த காஷ்மீர மதகுருக்களிடம் கலாம் உறுதி அளித்துள்ளார்.

காஷ்மீரின் பூன்ஞ், ராஜுரி மாவட்டங்களைச் சேர்ந்த இஸ்லாமிய மத குருக்கள் நேற்று முன்தினம் டெல்லியில் உள்ள குடியரசுத்தலைவர் மாளிகையில் ஜனாதிபதி அப்துல் கலாமை சந்தித்துப் பேசினார்கள்.

அப்போது கலாம் அவர்களிடம் கூறியதாவது,

காஷ்மீர உட்பட பாகிஸ்தான் - இந்தியா இடையே உள்ள அனைத்துப் பிரச்சினைகளும் விரைவில் தீர்க்கப்படும். மதகுருக்கள் மக்களின் பிரதிநிதிகள்.

எனவே, இந்தச் செய்தியை காஷ்மீர் மக்களுக்கு நீங்கள் தெரியப்படுத்தவேண்டும். எனது தந்தை கூட இராமேஸ்வரத்தில் உள்ள மசூதியில் இமாமாக இருந்தவர் தான. இவ்வாறு கலாம் அவர்களிடம் கூறினார். (ற)

# ஐ.நா பாதுகாப்பு சபையில் 2 நாடுகளுக்கு நிரந்தர பதவி

## அமெரிக்கா விருப்பம்

(வோஷிங்டன்)

ஐ.நா பாதுகாப்பு சபை விரிவுபடுத்தப்படும போது குறைந்தது ஜப்பான் உட்பட 2 நாடுகளுக்காவது நிரந்தர உறுப்பினர் பதவி கொடுக்கவேண்டும் என்று அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

ஐ.நா பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி பெறுவதற்கு சில விதிமுறைகள் கொண்டுவரப்படும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அதேசமயத்தில் புதிய உறுப்பினர்களுக்கு வீட்டோ அதிகாரம் அளிக்க அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இந்த வீட்டோ உரிமை தற்போதுள்ள பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு மட்டும்தான் இருக்கவேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஐ.நா பாதுகாப்பு சபை விரிவுபடுததப்பட உள்ளது. இதில் இந்தியா, ஜெர்மனி, ஜப்பான, பிரேசில் ஆகிய 4 நாடுகளும் தங்களுககு நிரந்தர உறுப்பினர் பதவி வேண்டுமென்று கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# மீண்டும் புத்துயிர் பெறுகிறது ரோமானிய பொற்கால நகரம்!

ரோமானிய பொற்கால நகரமான ஜெராஷ நகரம் மீண்டும் புத்துயிர் பெறுகிறது.

ரோமானிய பொற்கால சாம்ராஜ்யத்தில் 10 மிகப்பெரிய நகரங்கள் புகழுடன் திகழ்ந்தன. அவைகளில் ஒன்று இப்போதைய ஜோர்டான் நாட்டில் உள்ள ஜெராஷ் நகரமாகும். இதை அருங்காட்சியகம் போல, பண்டைக்கால பெருமையுடன் அப்படியே போற்றிப் பாதுகாத்து வருகறது ஜோர்டான் அரசு.

ரோம் நகரில் சரித்திரப் புகழ்பெற்ற 'சர்க்கஸ் மேக்சிமஸ்' என்ற பல்லாயிரம் பேர் அமர்ந்து பார்ககும் விளையாட்டு மற்றும் வீர சாகச நிகழ்ச்சிகள் நடக்கும் அரங்கம் ஆகியன இருந்தன். அதைவிட மிகச் சிறிய அரங்கம் இந்த ஜெராஷ் நகரில் உள்ளது.

பழங்கால ரோமானிய ஆட்சியின் போது இங்கு அமைக்கப்பட்ட ஓரிஜினலான 10 கேட் வாசல்கள் இப்போதும் அப்படியே உள்ளன. மேலும் பார்வையாளர்கள் அமரும் கல படிக்கட்டுகள் அப்படியே உள்ளன. அரங்கைச் சுற்றிலும் ஆலிவ் மரங்கள் நிறைந்த காடுகள் வளையம் போல அமைந்துள்ளன.

இங்கு அண்மையில் ஜூலியஸ் சீசர் நினைவைப் போற்றும் வகையில் ஒரு விழா நடந்தது. 1மணி நேரம் நடந்த இந்த விழாவில் ஒரு சிறப்புக் காட்சி நடத்தப்பட்டது. 'சேரியட் ரேஸ்' என்னும் குதிரைகளால் இழுத்துச் செல்லப்படும் ரேஸ் வண்டிகளின் போட்டி நடத்தப்படடது.

ஜோர்டானின் ஓய்வுபெற்ற இராணுவ வீரர்கள், சிறப்புப்படை மற்றும் பொலிஸ் படைவீரர்கள் பழங்கால ரோமானிய சேரியட் ரேஸ் வீரர்கள் போல உடையணிந்து போட்டியில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

## பதினான்கு முறை கைதானவர்

# மீண்டும் நிர்வாண நடைபயணம்

(இலண்டன்)

நிர்வாணமாக நடந்ததற்காக 14 முறை கைது செய்யப்பட்ட இங்கிலாந்து முன்னாள் கடற்படை வீரர் ஸ்டீபன் காக் மீண்டும் நடைபயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இங்கிலாந்தின் முன்னாள் கடற்படை வரர் ஸ்டீபன் காக். வயது 46. இவர் 2003-04ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் ஒரு முனையில் இருந்து மற்றொரு பகுதிக்கு உடலில் துணி எதுவும் அணியாமல் நிர்வாணமாக நடைபயணம் சென்றார். காலில் மட்டும் பூட்ஸ் அணிந்து இருந்தார்.

இவ்வாறு இவர் 14 முறை கைதானார். 13 தடவை பொதுமக்களின் அமைதிக்கு இடைஞ்சல் விளைவித்தார் என்றும் 1 முறை போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தினார் எனவும் இவர் கைதானார்.

இதில் 5 மாதம் சிறைத்தண்டனை கிடைத்தது. இப்போது மீண்டும் நிர்வாண நடைபயணம் செய்யப்போவதாக அறிவித்துள்ளார். ஆனால் கூடவே மெலானி ராபர்ட்ஸ் என்ற 33 வயது பெண்ணும் நடைபயணம் செல்லவுள்ளார்.

காக் தமது நிர்வாண பயணம் பற்றிக் கூறியதாவது,

நான் ஒரு மனிதன். மனிதாக இருப்பதில் எந்த வெட்கக்கேடும் இல்லை நிர்வாணமேனி அல்லது உடல் பற்றியும் எந்தத் தவறும் இலலை. நிர்வாணமாக நடக்கக்கூடாது என்று இங்கிலாந்தில் எந்த சட்டமும் இல்லை. நிர்வாணமாக இருந்து அதன்மூலம ஏதும் தீங்கு செய்ய நினைத்தால் அதுதான் கிரிமினல் குற்றம். இவ்வாறு அவர் கூறினார். (ற)

# செங்கல்பட்டு நீதிமன்றத்தில் சங்கராச்சாரியர்கள் ஆஜர்



(செங்கல்பட்டு)

சங்கரராமன் கொலை வழக்கு விசாரணை செங்கல்பட்டு நீதிமன்றில் நடந்து வருகிறது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் நேற்று முன்தினம் நேரில் ஆஜராக வேண்டும் என்று நீதிபதி அக்பர் அலி உத்தரவிட்டிருந்தார்.

அதை ஏற்று நேற்று முன்தினம் காலை செங்கல்பட்டு நீதிமன்றத்திற்கு ஜெயில்களில் இருந்து குற்றவாளிகள் அழைத்துவரப்பட்டனர். திருச்சி சிறையில் இருந்து கதிரவனும், கடலூர் சிறையில் இருந்து அப்புவும் தனி வான்களில் அழைத்துவரப்பட்டிருந்தனர்.

காலை 10.50 மணிக்கு ஜெயேந்திரர் தனது வானில் வந்தார். இதையடுத்த சில நிமிடங்களில் இளைய மடாதிபதி விஜயேந்திரர் தனது வானில் வந்தார். 11.20 மணிக்கு அவர்கள் நீதிமன்ற அறைக்குள் வந்தனர்.

நீதிபதி அக்பா அலியைப் பார்த்து வணங்கினார்கள். அவர்களுக்கு பதில் வணக்கம் தெரிவித்த நீதிபதி சைகையால் நாற்காலியில் அமரும்படி கேட்டுக்கொண்டார்.

அவர்கள் இருவரும் நாற்காலியில் அமர்நதனர். மற்ற குற்றவாளிகள் நின்றுகொண்டிருந்தனர். குற்றவாளிகள் ஒவ்வொருவரின் பெயரும் வாசிக்கப்பட்டது. அவர்கள் சார்பில் ஆஜராகும் வக்கீல்கள் யார் என்று சரிபார்க்கப்பட்டது.

ரகு, சுந்தரேச அய்யர் இருவரும் தினமும கையெழுத்து போடுவதற்காக வெளியில் தங்கி இருப்பதால் நீதிமன்றில் ஆஜராகவில்லை. அதை நீதிபதி ஏற்றுக்கொண்டார்.

குற்றவாளிகள் வருகை சரிபார்க்கப்பட்ட பிறகு எதிர்த்தரப்பு வக்கீல்கள் குற்றப்பத்திரிகையைப் படித்துப் பார்க்க கால அவகாசம வேண்டும் என்றனர். ஆனால் அரசு வக்கீல் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

என்றாலும் குற்றப்பத்திரிகையை படித்து பார்க்க கால அவகாசம் வழங்க நீதிபதி அக்பர் அலி சம்மதித்தார். வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 12ஆம் திகதி ஒத்திவைத்தார்.

சங்கரராமன் கொலை வழக்கு விசாரணையைப் பார்க்க பொலிஸ் சூப்பிரண்டு பிரேம் குமார் நீதிமன்றுக்கு வந்திருந்தார். ஆனால் ஆடிட்டர் ரவிக்குமார் வரவில்லை. (ற)

## கார்கள் தானாக எரிந்த அதிசயம்

டென்மார்க்கில் உள்ள பியூஜியாட் நிறுவனததின் கார்கள் தானாகவே எரிந்த அதிசயம் நடந்துள்ளது. டென்மார்க்கிலுள்ள பியூஜியாட் கார் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பியூஜியாட் 307 வகைக் கார் எஞ்சின் இயக்கம் நிறுத்தப்பட்டு பார்க் செய்யப்பட்டிருந்தது. திடீரென்று அது தீப் பிடித்து எரிந்தது. இதேவகையான ஒரு சில கார்களின் பாகங்களும் தீப் பிடிப்பதற்குப் பதில் உருகிவிட்டன. இப்படி இந்த வகைக கார்கள் 7 சேதமடைந்துள்ளன. ஒரே சமயத்தில் இவ் 7 கார்களும் எரிந்தும் உருகியும் போனதற்கு காரணம் என்னவென்று தெரியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் - குறள்

வலம்புரி

# ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு கொடுக்குமா?

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து ஜே.வி.பி. விலகிக் கொண்டதனால் பாராளுமன்றம் பலமிழந்து போயுள்ளது. பொதுக்கட்டமைப்பை கைவிடுவதாக இருந்தால் அரசிற்கு ஆதரவு வழங்குவோம் என்ற ஜே.வி.பியின் நிபந்தனையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தூக்கி எறிந்திருந்தார்.

யாரும் எதிர்பாராத வகையில் நடந்த மேற்படி சம்பவம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நன்மதிப்பை மேலும் அதிகரித்துள்ளது. அதே நேரம் இனவாதத்தை தூண்டுபவர்களுக்கு இது நல்லதோர் பாடமாகவும் அமைந்துள்ளது.

பொதுக்கட்டமைப்பை கைவிடுமாறு முன்வைத்த நிபந்தனைகளுக்கு சந்திரிகா குமாரதுங்க கட்டுப்படுவாரென்றே ஜே.வி.பி. நம்பியிருந்தது. அரசிற்கு வழங்கும் ஆதரவை ஜே.வி.பி. நிறுத்திக் கொண்டாலும் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தியே திருவேன் என்ற ஜனாதிபதியின் உறுதிப்பாடு உண்மையில் பாராட்டப்படவேண்டியதொன்றாகும்.

ஜே.வி.பி. விதித்த நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு அரசைக் காப்பாற்ற ஜனாதிபதி முயற்சித்திருப்பாராயின் அதன் விளைவு பாரதூரமாக அமைந்திருக்கும்.

அவ் வகையில் ஜனாதிபதி தீர்க்கதரிசனத்துடன் நடந்துள்ளார் என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். ஜே.பி.பியின் நிபந்தனைக்கு ஜனாதிபதி இசைந்து கொடுக்காமை சிங்களவர்கள் எல்லோரும் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்பதுவும் நிரூபணமாகியுள்ளது.

அதேநேரம் இனவாதத் தீயை மூட்டி சிங்கள மக்களை தமிழர்களுக்கு எதிராகத் திசை திருப்பி விடும் ஜே.வி.பியினரின் சதித் திட்டமும் முறியடிக்கப்பட்டுள்ளது. எனினும் தமது ஆதரவில்லாமல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி நடத்த முடியாது என்பதை ஜே.வி.பி. நிரூபிக்காத வகையில் அரசியல் சூழ்நிலையை மாற்றியமைப்பது இந்த நாட்டில் சமாதானத்தை விரும்பும் அரசியல் கட்சிகளின் தலையாய கடமையாகும்.

அதாவது அரசிற்கு வழங்கிய ஆதரவை ஜே.வி.பி. நீக்கியதால் ஆட்சி கவிழுமாக இருந்தால் அது ஜே.வி.பிக்கு வெற்றியாகி அத்துடன் சிங்கள மக்கள் மத்தியில் அந்தக் கட்சி பலமுடைய ஒன்றாகவும் மாறிவிடும்.

எனவே இது விடயத்தில் தெளிந்த சிந்தையுடன் தூர நோக்குடைய அரசியல் தீர்க்க தரிசனத்துடன் சமாதானத்தை நேசிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் செயற்படவேண்டும்.

இதற்காக விரும்பியோ விரும்பாமலோ ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்குவது தேவையான ஒன்றே. ஜனாதிபதியைப் பொறுத்தவரை அவர் இழைத்த பெருந்தவறு ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தமையாகும். இருந்தும் 15 மாதங்களுக்குள் ஜே.வி.பி. வெளியேறுவதற்கு அவருடைய உறுதியான முடிபு காரணமாக இருந்தமை அவரின் அரசியல் எதிர்காலத்தில் ஓர் வெளிப்பைத் தந்துள்ளது. இவற்றின் இறுதியான முடிபுகள் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி காட்டும் ஆர்வத்தில் தங்கியுள்ளது என்பதே உண்மை.

அந்த உண்மையை அறிவதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அரசிற்கு தார்மீக ஆதரவை வழங்கவேண்டும். அப்போதுதான் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பியின் பருப்பு சிங்கள மக்களிடம் அவியவில்லை என்ற செய்தியை வரலாறு பேசிக் கொள்ளும்.

# நாட்டுமக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் பொதுக்கட்டமைப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்

## -அத்துரலிய ரத்தின தேரர்

(கொழும்பு)

**சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான யோசனைகள் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் உறுதிசெய்யப்படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.**

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அத்துரலிய ரத்தின தேரர்,

பொதுக்கட்டமைப்புக்கு மூன்று பீடங்களையும் சேர்ந்த மகா நாயக்கர்களின் விசேட அனுமதி அத்தியாவசியமானது.

மக்களைத் தெளிவுபடுத்தாமல் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செய்தித் திட்டத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. பாராளுமன்றத்திற்கும் அமைச்சரவைக்கும் பொதுக்கட்டமைப்பு யோசனைகளை வெளிப்படுத்துமாறு நாம் கூறினோம். ஏனெனில் கட்டமைப்புக் குறித்து தெரியாததினாலேயே அவ்வாறு நாம் கூறினோம்.

பொதுக்கட்டமைப்பு உத்தியோகபூர்வமாக சட்டபூர்வமாகப் பாராளுமன்றில் சமர்ப்பித்தால் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகியன விடுதலைப்புலிகள் மீது விரித்த தடைக்கு என்ன நடக்கும்? இதனை உத்தியோகபூர்வமாகப் பாராளுமன்ற அரசியல் சாசனத்தில் சேர்க்கும் போது புலிகள் மீதான தடையை நீக்க நேரிடும். இது புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்து விடும்.

இத்தகைய சட்டமூலத்தின் கீழ் இதனைக் கொண்டு வரவேண்டுமாயின் பாராளுமன்ற முன்றலில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

அப்போது மக்கள் வாக்கெடுப்பு மூலம் பொதுக்கட்டமைப்பைத் தீர்மானிப்பார்கள் என்றும் குறிப்பிட்டார். (ற-8)

# இலங்கை அமைச்சர்களின் மாநாட்டில் மாலைதீவு எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள்

## எதிர்ப்புத் தெரிவித்து மாலைதீவு அரசு முறைப்பாடு

(கொழும்பு)

இலங்கை அமைச்சர்களின் மாநாடொன்றில் கலந்து கொள்வதற்கு மாலைதீவின் எதிர்க்கட்சியாகிய மாலைதீவு ஜனநாயகக்கட்சியின் உறுப்பினர்கள் அழைக்கப்பட்டதற்கு மாலைதீவின் ஜனாதிபதி தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடல் பண்டாரநாயக்க சர்வதேச நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேற்படி கூட்டத்தை இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான உறவில் சினம் ஊட்டும் ஒன்றாக மாலைதீவு அரசாங்கம் காண்பதாக மாலைதீவு அரசு, இலங்கை அரசாங்கத்திடம் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளது.

ஜனாதிபதி கயூம் இதனை மலேசியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாகத் தெரிவித்துள்ளதாக மாலைதீவின் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

"மாலைதீவு அரசாங்கம் ஒரு அரசியல் மாற்றத்திற்கு உட்பட்டிருக்கிறது. இவ்வேளையில் மாலைதீவின் எதிர்க்கட்சியை மட்டும் சார்ந்த பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு கருத்தரங்கு கொழும்பில் நடத்தப்பட்டதை மாலைதீவு கண்டிக்கின்றது. கருத்தரங்கில் இலங்கையும் முக்கிய அமைச்சர்கள் பங்குபற்றியிருந்தமையை மாலைதீவு தனது கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது" என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருத்தரங்கில் மாலைதீவின் அரசியல் கலாசாரம் அரசியல் பன்முகத்தன்மைக்கு முட்டுக்கட்டையாகவுள்ளது. பலகட்சி முறையை அமுல் செய்வதில் உள்ள சட்ட ரீதியான மட்டுப்பாடுகள் மாலைதீவு ஜனநாயகக் கட்சிக்கும் அரசாங்கத்திற்குமிடையே இன்றுள்ள சிக்கல் நிலை பலகட்சி முறையை முன்னெடுப்பதில் சர்வதேச சமூகத்திற்கு உள்ள முக்கிய பொறுப்பு என்பன போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

ஜனநாயகக்கட்சி உறுப்பினர் ஒருவர் கூறுகையில், அந்த இரு மணி நேரக் கூட்டத்தில் பல இராஜதந்திரிகளும், கல்விமான்களும் கலந்து கொண்டிருந்ததாகவும் கூட்டம் பயனுள்ளதாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். (ற-6)

# ஞானசம்பந்தர் கலைமன்ற 43ஆவது ஆண்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் 43 ஆவது ஆண்டு கலைவிழா இன்று மன்றத்தலைவி திருமதி யோகரஞ்சிதம் இராஜரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி. வசீகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பாலர் கதம்பம், பேச்சு நடனம், வயலின் இசை, இன்னிசை, வீணை இசை உட்பட பா.இரகுவரனின் நெறியாழ்கையில் "அழிதல் காணும் புவிக்கோளம்" நாடகமும் இடம்பெறும் என செயலாளர் ச. சத்தியசீலன் அறிவித்துள்ளார். (அ-52)

# பேரினவாதிகளின் போக்கைக் கண்டித்து அடையாள உண்ணாவிரதப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சிங்களப் பேரினவாதிகளின் அராஜகப் போக்கைக் கண்டித்தும் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்பதை வலியுறுத்தியும் தென்மராட்சி வணிகர் சங்கங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் கைதடிச்சந்தியில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இவ் அடையாள உண்ணாவிரதப் போராட்டமானது கைதடிச் சந்தியில் நேற்று முன்தினம் காலை 9.00மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12.30 மணிக்கு முடிவுற்றது. இவ் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவ்வாறான அடையாள உண்ணாவிரதப் போராட்டம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ற-19,43)

# சைவசமய விவகாரக் குழு வறிய மாணவர்களுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்பபாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவானது கல்வியில் போதிய ஆர்வமும் ஊக்கமும் இருந்தும் வறுமை காரணமாக கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ள யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட 36 பாடசாலை மாணவர்களுக்கு முதற்கட்டமாக 500 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு யாழ்.மாநகராட்சி சைவசமய விவகாரக்குழு ஏற்பாடுகளை செய்யவுள்ளது.

இரண்டாவது கட்டமாக ஒப்பீட்டு ரீதியில் வருமானமற்ற வறிய குடும்பங்களைச் சேர்ந்த 6 மாணவர்களுக்கு இவ்வாண்டு ஆகஸ்ட் முதல் இரண்டு மாதங்களுக்கொரு தடவை- ரூபா 500 பெறுமதியான பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளன.

ஜனவரி 2006இல் இந்த நடைமுறையைத் தொடர்வது அல்லது விரிவாக்குவது பற்றி மீளாய்வு செய்யப்படும் எனவும் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இக் குழுவினது நிர்வாக சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வி மதுரா கணேசலிங்கம் (யா. வைத்தீஸ்வராக் கல்லூரி), செல்வன் பத்மராஜா றோகிசன் (பெரியபுலம் மகா வித்தியாலயம்), செல்வன் ரவீந்திரகுமார் டிலாஞ்சன் (நல்லூர் சென்.பெனடிக் றோ.க.வித்தியாலயம்), செல்வி துவாரகா கோபால் (கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), செல்வி அர்ச்சனா குணரட்ணம் (கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்), செல்வி நிஷாந்தினி நடராசா (கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்) ஆகிய மாணவர்களே இரண்டு மாதங்களுக்கொரு தடவை ரூபா 500 பெறுமதியான பாடசாலை உபகரணம் பெறவெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற)



# திசைரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

**பக்தி என்னும் சூரியன் நமது இதயத்தில் உதயமாகத் தொடங்கியதும் நமது செயல்கள் அனைத்தையுமே இறைவனிடம் அர்ப்பணித்து விடவேண்டும் என்ற விருப்பம் நமக்கு ஏற்பட்டு விடுகிறது. ஒரு கணம் இறைவனை நாம் மறக்க நேர்ந்தால் அது நமக்கு அளவில்லாத வேதனையைத் தருகிறது.**

சுவாமி விவேகானந்தர்

# தற்காலிக கொட்டகை சரிந்ததில் பதினான்கு மாணவர்கள் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரை மகாவித்தியாலய தற்காலிக பாட சாலை கொட்டகை நேற்று சரிந்து விழுந்ததில் 14மாணவர்களும் 2 ஆசிரியர்களும் காயமடைந்துள்ள னர்.

ஆழிப்பேரலையால் வாகரை மகாவித்தியாலய கட்டடம் அனைத் தும் சேதமடைந்ததையடுத்து தற் காலிக கொட்டகைகளில் இயங்கி வருகிறது.அரசசார்பற்ற அமைப் பொன்றினால் அமைத்து கொடுக் கப்பட்ட தகரத்திலான தற்காலிக கொட்டகையொன்றே சரிந்துவிழுந் துள்ளது. (ச)

# அமைச்சு பதவிகளுக்கு பதில் அமைச்சர்கள்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட் டமைப்பில் இருந்து பதவிவிலகிய ஜே.வி.பியின் அமைச்சு பதவிக ளின் வெற்றிடங்களுக்கு புதிய அமைச்சர்களை நியமிக்காமல் இருக்க ஜனாதிபதி முடிபுசெய்துள் ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது பதவியில் இருக்கும் அமைச்சர்கள் சிலரையே வெற்றி டங்களாக உள்ள அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்களாக நியமிக் கப்படவுள்ளனர்.அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் சிலருடன் நேற்று நடாத்திய சந்திப்பின்போது ஜனாதிபதி இம்முடிவினை எடுத்துள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.(ச.4)

# புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை விரை வில் ஏற்படுத்தக்கோரி புத்தளம் பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

போருக்கெதிரான முன்னணி ஏற்பாடுகளை செய்த இவ்வார்ப் பாட்டப்பேரணியில் மூவினமக்க ளும் கலந்துகொண்டு பொதுக்கட் டமைப்பை விரைவில் ஏற்படுத்த கோரி கோஷமிட்டனர். (ச-8)

# பொதுக்கட்டமைப்பை அமைக்கா...

அவர் மேலும் தெரிவிக்கையில் யுத்தத்திற்குச் செல்லாமல் தமிழீழ விடுதலைப்புலிகளை சமாதான மற்றும் ஜனநாயக வழியில் அழைத் துச்செல் இந்தப்பொதுக்கட்ட மைப்பு ஒருபாதையாக அமையும்.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து மேற்கொள்ளவுள்ள பொதுக்கட்டமைப்பு விடயத்தில் எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இதற்கு மாற்றுத்திட்டமாக எதையும் முன் வைக்கவில்லை.

எனவே இந்த சந்தர்ப்பத்தினை நாம் சரியாக பயன்படுத்தி எதிர் கால சந்ததியினருக்கு சமாதானத் தை பெற்றுக்கொடுக்க வேண்டும் இதற்கு யார் இடைஞ்சலாக வந் தாலும் அவர்கள் மக்களால் தூக்கி எறியப்படுவார்கள் என்றார்.

வடக்கு கிழக்கில் தற்சமயம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து அரசாங்கம் மேற்கொள் ளும் அபிவிருத்திப் பணிகளை உத்தியோக பூர்வமாக முன்னெடுத் துச்செல்வதற்கு பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

இந்தப் பொதுக்கட்டமைப்பின் கீழ் அபிவிருத்திப் பணிகள் தொடர் பாக பரிந்துரை செய்வதே தற் போதைய முக்கிய பணியாகும்.

பொதுக்கட்டமைப்பானது பிர தேசசபையைவிட குறைவான அதிகாரங்களை கொண்ட ஒரு அமைப்பாக இருக்கும்.

இதனை ஆட்சேபிக்கும் பிரி வினர் யுத்தம் ஒன்றின் மூலம் பிரச் சினையை தீர்க்கலாம் என நிலைத் தால் நாட்டில் 18வயதிற்கு மேற் பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவப்பயிற்சி வழங்க நடவடிக் கையெடுக்கவேண்டும்.

அதில் எனது பிள்ளையும் இடம் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். ஆழிப்பேரலையின் பின்னர் ஏற்படுத்தப்படவிருக்கும் இப் பொதுக்கட்டமைப்பினால், சமாதா னம் ஏற்படும் என நூறுவீதம் எதிர் பார்க்க முடியாது.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்தோடு முதன் முதலாக இணைந்து செயற்பட முன்வந்துள்ளமை சமாதானத்திற்கு அடிப்படையாக அமையும் என அரசாங்கம் நம்புவதாக ஜனாதி பதி தெரிவித்தார்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொதுக்கட்டமைப் பை சிலரின் வேண்டுகோளுக்கு இணங்கவே பாராளுமன்றில் சமர்ப் பிக்கப்படவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பில் அரச அதிகாரி ஒருவரே கையெ ழுத்திடுவார் என கூறினார்.

சுனாமி பேரலைகளினால் பாதிக் கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிக ளை அபிவிருத்தி செய்யவும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்குமாகவே சுனாமி நிவாரண சபை அமைக்கப் படவுள்ளது. இத்னை புலிகளுக்கு அதிகாரம் வழங்குவதாகவோ அல் லது தனி நாட்டிற்கான ஒரு அடித் தளமாகவோ் சிலர் கருதுகின் ற்னர்.

இவ்வாறு ஒரு கருத்தினாலேயே கூட்டமைப்பு அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறியது. ஜே.வி. பி.வெளியேறினாலும் சிறுபான் மை அரசாக இருந்து கொண்டு ஏனைய கட்சிகளின் ஒத்துழைப் புடனும் சர்வுதேச ஆதரவுடனும் பொதுக்கட்டமைப்பை அரசு உரு வாக்கும் என ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

பொதுக்கட்டமைப்பில் விடுத லைப்புலிகளினதும்முஸ்லிம் மக்களி னதும் பிரதிநிதிகள் அங்கம் வகிப் பார்கள். இவர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக அரசாங்கத் திடம் சமர்ப்பிக்கும் யோசனை திறைசேரியின் ஆய்வுக்கு உட் படுத்தி அரசுநிறுவனங்கள் மூலம் உதவி கள் சென்றடையும் என ஜனாதி பதி மேலும் கூறினார். (ச,8,4)

## எதிர்க்கட்சி...

உறுப்பினர்களும் அமர ஆச னங்கள் இன்மையால் அவர்களின் 39நாடா ளுமன்ற உறுப்பினர்களில் 34 பேர்ஆளும் கட்சிப் பகுதியில இருக்கும் ஆச னங்களி லேயே அமரவேண்டியேற்படு

இதன்படி எதிர்வரும் 22 ஆம் திகதி பாரா ளுமன்றம் கூடும் போது ஜே.வி.பி யின் 5 உறுப் பினர்கள் எதிர்க்க ட்சி ஆசனங்க ளிலும் 34 பேர் ஆளும் கட்சி ஆசனங்களிலும் அமருவர் என பாராளுமன்ற பொதுச்செயலா ளர்தெரிவித்தார்.

தங்கள் உறுப்பினர்கள் இரு பக்கங் களிலும் பிரி ந்து அமர்ந்த போதிலும்அவர் களின் செயற் பாடுகள் ஒன் றாகவே இருக் கும்என ஜே.விபி யின் உறுப்பி னர் விமல் வீர வன்ஸ தெரிவி த்தமை குறிப்பி டத்தக்கது. (ச4)

# தமிழ் கூட்டமைப்புடன் இணைந்தால் பௌத்த பிக்குகள் எதிர்ப்பராம்

(கொழும்பு)

ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட நாட்டுப்பற்றுள்ள அனைத்துச் சக்திகளும் ஒன்றி ணைந்து செயற்படும் காலம் வந் துள்ளது என்று ஜாதிகஹெல உறு மயவின் ஒமல்பேசோபிததேரர் தெரிவித்துள்ளார்.

உத்தேச பொதுக்கட்டமைப்பு தொடர்பான யோசனையை நாடா ளுமன்றத்திற்கு கொண்டுவர அர சாங்கம் தீர்மானத்திருப்பதாக பிர தமர் கூறியுள்ளார். இந்த உடன் படிக்கை சம்பந்தமாக ஜனாதிப தியும், நோர்வேயும், விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகர னும் இரகசியமாக இணக்கப்பாட் டை ஏற்படுத்திக்கொள்ளாமல் அது சம்பந்தமாக மகாநாயக்கர்கள் உட்பட மகாசங்கத்தினர்கள் நாடா ளுமன்றம் உட்பட் மக்கள்பிரதி நிதிகள் பொதுமக்கள் ஆகியோரி னது கருத்துக்களை பெறுவதுடன் அவர்களின் அனுமதியை பெறவேண் டும் என்பதே நாம் உண்ணாவிர தம் மேற்கொண்டதன் ஒரு நோக் கமெனஅவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்டயுத்தநிறுத்த ஒப பந்தமானது அரசியல் அமைப்பிற்கு முரணானது. அந்த உடன்படிக் கைக்கு எதிராக தாக்கல் செய்யப் பட்ட வழக்கு இன்னும் நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

அவ்வாறான ஒருநிலையில் பொதுக்கட்டமைப்பு எனப்படும் சுனாமி நிவாரணசபை யோசனை பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப் படுமானால் விடுதலைப்புலிகள் பிரிவினைவாதத்தை கைவிடுவ தாக தேசியரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அறிவிக்கவேண்டும்.

ஐக்கியதேசியக்கட்சியினதும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினதும் ஆதரவைப்பெற்று நாடாளுமன்றத் தில் பொதுக்கட்டமைப்பு யோசனை யை நிறைவேற்றிக்கொள்ள அரசு முயன்றால் அதற்கு நாம் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்துவோம். என சோபிததேரர் தெரிவித்தார். (ச)

ஏகாதசருத்திர ஹோம பெருவிழா

இணுவில் விசாலாட்சி சமேத விஸ்வேஸ்வர சுவாமி திருக்கோவிலில் ஏகாதச ருத்திர ஹோம பெருவிழா நாளை (19.06.2005) காலை 8மணி முதல் ஒரு மணி வரை நடைபெறும்

பிரதம குரு
பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவக் குருக்கள்
(சட்டநாதர் சிவன் பிரதமகுரு)

ஆலய குரு
பிரம்மஸ்ரீ வா.ஜெனார்த்தன சர்மா

உதவி குரு
பிரம்மஸ்ரீ வா.ஜெயவஸ்த்தாங்க சர்மா
பிரம்மஸ்ரீ வா.விஷ்ணுவர்த்தன சர்மா.

உபயம்
திரு.சிவ.வெற்றிவேலாயுதம் (நல்லூர்)
திரு.வை.செல்லத்துரை (மாவிட்டபுரம்)

தர்மகர்த்தா,
சீ.பரமேஸ்வரன்

அனைவரும் வருக சிவன் தாள் பணிக
(9620) சுபம்

புதிய புத்தகம்

வெளிவந்துள்ளது. இளைப்பாறிய பேராசிரியை நவமணி செல்வராஜா ஆங்கிலத்தில் எழுதிய
'A COCK TAIL IN ENGLISH.'
யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியிலுள்ள
SRI LANKA
புத்தக சாலையில் விற்பனையாகிறது
(5259)

யாழில் முதன்முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்

கடல், விமான மார்க்கமாக வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு உணவு, உடை, அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றுடன் கடிதங்கள், விடியோ நாடாக்கள் முதலியவற்றை குறைந்த செலவில் அனுப்பிட

கடல் மார்க்கமாக (SEA CARGO)
ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், ஹொலண்ட், இத்தாலி)
கனடா, அமெரிக்கா, அவுஸ் திரேலியா, லண்டன்
5 KG 2500/=

விமான மார்க்கமாக (AIR CARGO)
கனடா, அமெரிக்கா, அவுஸ் திரேலியா, லண்டன் → 1 KG 1000/=
ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மனி, ஹொலண்ட்) → 1 KG 650/=

Note: நாமே பொதிசெய்து அனுப்புவோம்

RAINBOW TRAVELS & TOURS
32/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(அபிநயா நகைமாடத்திற்கு மேல்) T.P: 0777328219

எம்மிடம் சகல விதமான ரீவிக்களும், CD,VCD,DVD PLAYER களும், சகலவிதமான றேடியோக்களும், மற்றும் மின்சார உபகரணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்

நியூ சிற்றி றேடர்ஸ்

மேல்மாடி. இல135/1 கஸ்தூரியார் வீதி
குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226
(C- சு)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இன்டி பெண்டன்ஸ்டே டைரக்டர்
ரோலண்ட் எம்ரீச் மீண்டும்
முத்திரை பதிக்கும் படைப்பில்
THE DAY AFTER TOMORROW
(தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை விபரிக்கும் சித்திரம்
கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (பு.நே)
பாடசாலை ஊடாக வரும் மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்

மனோகரா யாழ்
அதிரடி வெளியீடு
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லிஆகி யோரின் சிறப்பு நடிப்பில்


இயக்கம்: ஷங்கர்
இசை: ஹரிஸ் ஜெயராஜ்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ்
சங்கானை
விஜயகாந்த், மீனா, நம்பியார் மற்றும் பலர் நடித்த
சேதுபதி I.P.S
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.